Registered as a Newspaper

★ தேர்மோஸ்ரற் உடன் கூடிய
CROMPTON GREVES
★ மோட்டாரிற்கு இணைக்கப்பட்ட
சொலிட் பம்புகளையே வாங்குங்கள்

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1-50

★ துருப்பிடிக்காத இரும்பினாலான அச்சு
★ கல்சியம் கூடிய நீரில் நீண்டகாலம் பாவிப்பதற்கென விசேடமாக இறக்குமதி செய்யப்பட்ட ஜேர்மன் வாட்டசில்
★ பித்தளையினாலானபப்
★ பம்பின் செயற்பாட்டிற்கு ஒரு வருட உத்தரவாதம்
சொலிட் பம்ப்

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஸு ஆவணி மீ 15 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 05 (31 — 08 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 23 7

★ மாகாண சபை அதிகாரங்கள்

# முதற்கட்டப்பேச்சின் பெறுபேறு:

# மிகப் பெரும் இடை வெளி!

## தமிழர் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்வதாக இல்லை

புதுடில்லி, ஆக. 31

மாகாண சபைகளின் அதிகாரங்களுக்கு இறுதி வடிவம் கொடுப்பதற்கான பேச்சுக்கள் கடந்த வாரம் கொழும்பில் நடந்தன அல்லவா?

அவற்றின் பெறுபேறுகள் அரசின் நிலைப்பாட்டுக்கும், தமிழர் தரப்பின் எதிர்பார்ப்புகளுக்கும் இடையில் மிகப் பெரிய இடைவெளியைக் காட்டுவதாக அறியவந்துள்ளது.

தமிழர் தரப்பு, மாகாண சபை அதிகாரங்கள், சுயாட்சி அடிப்படையில் அமையவேண்டுமென எதிர்பார்க்கின்றன. ஆனால் இலங்கை அரசாங்கமோ மத்திய அரசிடமே முக்கிய அதிகாரங்களைக் குவித்துவைக்கும் நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறது.

தமிழர் தரப்புக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் மிகப் பெரிய இடைவெளியைக் காணக்கூடியதாக இருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

முதற்கட்டப் பேச்சுக்களின் போது சட்டம். அரசமைப்பு ஆகியவை பற்றி ஆராயப்பட்டன.

இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் எதிர்வரும் புதன்கிழமை புதுடில்லியில் ஆரம்பமாக உள்ளன.

அப்போது காணி, கல்வி, தொழில் வளர்ச்சி, சமூகப் பாதுகாப்பு ஆகிய துறைகள் பற்றி பரிசிலனை செய்யப்படவுள்ளன.

பத்துப்பேர் கொண்ட இலங்கை அரசுக் குழு திரு. மெனிக்திவல தலைமையில் இப்பேச்சுக்களில் கலந்துகொள்ளும்.

தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்களும் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையில் வடக்கு. கிழக்கு மாநில இடைக்கால நிர்வாக சபையில் 13 பேர் உறுப்பினர்களாக இருப்பர் என்றும், கூட்டணியின் சார்பில் நால்வர் இடம் பெறுவர் என்றும் பேசப்பட்டுவருகின்றது.

இடைக்கால நிர்வா (6ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் அந்த "ஹோர்ன்" சத்தம்!

யாழ்ப்பாணம், ஆக. 31

சுமார் மூன்று வருடங்களின் பின்னர் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் ரயிலின் 'ஹோர்ன்'' சத்தத்தைக் கேட்கக்கூடியதாக இருந்தது.

பரீட்சார்த்தமாக விடப்பட்ட ரயில் ஒன்று நேற்றிரவு யாழ். ரயில்நிலையத்தை வந்தடைந்தது.

இந்த ரயிலில் ஐந்து பெட்டிகளில் 'சிலீப்பர்' கட்டைகள் கொண்டுவரப்பட்டன.

பாதை இல்லாத இடங்களில் ரயில் நிறுத்தப்பட்டு, அது உடனடியாகச் சீரமைக்கப்பட்டு ரயில் சிறிதுசிறிதாக முன்னேறியது.

ரயிலின் 'ஹோர்ன்' சத்தம் கேட்டதும் நாலா திசைகளிலும் இருந்துவந்த பொது மக்கள் ரயிலைச் சூழ்ந்துகொண்டனர்,

ரயில்வே ஊழியர்கள் இரவுபகல் பாராது மிகத் துரிதமாகத் தமது கடமையைச் செய்த வண்ணமிருந்தனர்.

திருத்த வேலைகள் செய்யப்பட்ட இடங்களில் மக்கள் வெள்ளம் அலைமோதியது.

(இ-7-51)

## ஜே. ஆரின் துணிச்சலை பாராட்ட என்ன இருக்கிறது?

### சிறிமா கேட்கிறார்

கொழும்பு, ஆக. 31

நிர்ப்பந்தம் காரணமாக வீரம் இழந்த நிலையில் திரு. ஜெயவர்த்தன இந்திய—இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். அவரைப் போய் வீரமாக, துணிச்சலாக நடந்துகொண்டார் என்று இந்தியா புகழாரம் சூட்டுகின்றது. ஒப்பந்தத்தில் சேர்க்கப்படாத சலுகைகளையும் வழங்கிய திரு. ஜெயவர்த்தனவை இந்தியா இப்படிப் பாராட்டுவதில் ஆச்சரியமே இல்லை.

இப்படி சுதந்திரக் கட்சித்தலைவர் திருமதி. சிறிமாபண்டாரநாயக்க 'சண்டே டைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும்சொன்னதாவது; வடக்கு, கிழக்கு மாகாணசபையின் நிர்வாகத்தை தமிழ் அரசியல் கட்சிகளும், தமிழ் தீவிரவாதக்குழுக்களுமே வைத்திருப்பர்.

கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடைபெறும்போது மகாண சபை நிர்வாகம் யாழ்ப்பாணத்தின் கையில் தான் இருக்கும்.

சந்தேகம் இன்றி முதலமைச்சராக தீவிரவாதி ஒருவர்தான் இருப்பார்.

இந்த நிலையில் எப்படி கிழக்கு மாகாண மக்கள் வாக்களிப்பர்.

கிழக்கில் இருந்து வெளியேறியவர்கள் எப்படி வாக்களிப்பதற்காகத் திரும்பிச் செல்ல முடியும்.

கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடைபெற வேண்டிய காலத்தில் தான் இந்தியாவில் பொதுத் தேர்தலும் நடக்கப் போகின்றது.

அங்கு தமிழர்களின் நிர்ப்பந்தம் காரணமாக இங்கு சர்வசன வாக்கெடுப்பை நடத்தாமலே இந்தியா பார்த்துக் கொள்ளும்.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்னார், (இ-எ)

## சேதமுற்ற ஆலயங்கள் யாவும் புனரமைப்பு

### அமைச்சர் இராசு தகவல்

சென்னை, ஆக. 31

வடக்கு, கிழக்கில் சேதமுற்ற ஆலயங்கள் யாவும் புனரமைக்கப்படும் என்று பிரதேச அபிவிருத்தி, இந்து கலாசார அமைச்சர் திரு. செ. இராசதுரை இங்கு தெரிவித்தார்.

(6 ஆம் பக்கம் பார்ச்க)

### நண்பகலில் நன்றாகத் தூங்குங்கள்!

லண்டன், ஆக. 30

இருதய நோயிலிருந்து தப்ப வேண்டும் என்று எண்ணுகிறீர்களா?

அப்படியானால் நண்பகலில் சாப்பிட்ட பின்னர் அரை மணி நேரம் நித்திரை செய்யுங்கள்.

இதை நாம் சொல்லவில்லை லண்டனில் உள்ள வைத்திய ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று கண்டு பிடித்திருப்பதாக பிரபல வைத்திய சஞ்சிகையொன்று தகவல்வெளி (6ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைவங்கியில்இன்று பணப் புழக்கம் ஆரம்பம்

### 2 மணி நேரத்துக்கு

யாழ்ப்பாணம், ஆக. 31

இலங்கை வங்கி இன்று தொடக்கம் பணப்புழக்கத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கிறது:

வங்கியின் யாழ்ப்பாணக்கிளை இன்று தொடக்கம் காலை 9 மணி முதல் 11 மணி வரை பணப்புழக்கம் நடத்தும்.

இந்திய இராணுவத்தின் பாதுகாப்புடன் கோட்டையிலிருந்து பணம் எடுத்துவரப்படும்.

நிலைமையை அனுசரித்து பணப்புழக்க நேரம் மெதுமெதுவாக விஸ்தரிக்கப்படும் என்று இலங்கை வங்கியின் யாழ். கிளை வட்டாரங்கள் உதயனுக்குத் தகவல் தந்தன.

1984 ஏப்ரல் மாதத்தின் பின்னர், அதாவது சுமார் மூன்றரை வருடங்களின் பின்னர் இலங்கை வங்கியில் பணப் புழக்கம் இன்று தொடங்க இருக்கிறது.

1984 ஏப்ரலின் பின்னர், கோட்டையில் ஒரு வங்கிக் கிளை நிறுவப்பட்டுப் பணப்புழக்கம் நடத்தப்பட்டது.

அங்கு சென்றுவருவது வங்கி ஊழியர்களுக்குப் பாதுகாப்பில்லை எனத் தெரிந்த பின்னர் அந்த நடைமுறை நிறுத்தப்பட்டு, கொடுப்பனவுச் சட்டைகளும், டிராங்குகளும் மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றன.

அதனால் வாடிக்கையாளர்கள் பலவித கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இன்று பணப்புழக்கம் ஆரம்பமாவதோடு நிலைமை மெதுமெதுவாக வழமைக்கு வந்துவிடும் என நம்பப்படுகிறது. [அ]

## யாழ்தேவிஇன்று யாழ் நகர் வருகிறது

கொழும்பு, ஆக. 31

யாழ்தேவி ரயில் நீண்ட நாளைக்குப் பிறகு இன்று யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்கு வருகின்றது.

இன்று காலை 5-45 மணிக்கு கோட்டையில் இருந்து புறப்படும் யாழ்தேவி, பிற்பகல் 2-30 மணிக்கு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை வந்தடையும். (இ-எ)

### முச்சந்தி முரளி



ரயில் வருகுது, காசு வருகுது, கொழும்பு மரக்கறியும் வருகுது. எல்லாமே வந்துகொண்டிருக்கு கடைசியிலை என்னத்திலை முடியுமோ ...?

### சின்னக்கடை சந்தையில் - களவு

யாழ் சின்னக்கடை, குருநகர் நவீன சந்தைக்குள் களவுகள் அதிகரித்து வருகின்றன என்று புகார் செய்யப்பட்டுள்ளது.

குருநகர் நவீனசந்தையின் முரளி ஸ்ரோர்ஸில் நேற்று முன் தினம் இரவு களவு நடைபெற்றுள்ளது.

சமீப காலத்தில் வேறு சில பெட்டிக் கடைகளிலும் சிறு களவுகள் நடைபெற்றுள்ளன.

### காங்கேசன் பொலீஸ் நிலையம் நாளை இயங்கும்

யாழ்ப்பாணம், ஆக. 31

காங்கேசன்துறை பொலீஸ் நிலையம் நாளை முதல் இயங்கவுள்ளது.

இதற்கென யாழ்ப்பாணத்தில் கடமை புரிந்த 10 பொலீஸார் காங்கேசன்துறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி பொலீஸ் நிலையம் காங்கேசன் (6 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் அதிரடிப்படை முகாம்கள் மூடப்பட்டு வருகின்றன

மட்டக்களப்பு. ஆக 31

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் உள்ள விசேஷ அதிரடிப்படை முகாம்கள் மூடப்பட்டு வருகின்றன. ஆனால் இராணுவ முகாம்கள் எதுவும் இதுவரை மூடப்பட வில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 இராணுவ முகாம்களும் 16 விசேஷ அதிரடிப்படை முகாம்களும் இருந்தன அம்பாறை மாவட்டத்தில் 13 இராணுவ முகாம்களும் 7 விசேட அதிரடிப் படை முகாம்களும் இருந்தன.

மேற்படி முகாம்களில் மட்டக்களப்பில் வவுணதீவு, கொம்மாதுறை, ஏறுவூர், வெல்லாவெளி, அம்பிலாந்துறை, மணற்பிட்டி ஆகிய 6 முகாம்களும் மூடப்பட்டுள்ளன. ஊறணி, கரடியனாறு முகாம்களும் மூடப்படவுள்ளன.

அம்பாறையில் தாண்டியடி, காஞ்சுரங்குடா, சாகாமம், சவளக்கடை, கல்முனை ஆகியன மூடப்பட்டுள்ளன. திருக்கோவில். அக்கரைப்பற்று ஆகிய இரு முகாம்களே உள்ளன.

இம் மாவட்டத்திலுள்ள 13 இராணுவ முகாம்களில் 3 தவிர ஏனையவை அம்பாறை தொகுதியிலுள்ளது குறிப்பிடத்தக்கது.(இ21)

### யாழ் நகரில் கொத்தலாவலை

கப்டன் கொத்தலாவலை நேற்று யாழ்ப்பாணம் வந்தார்.

அவர் தனியார் ஹோட்டல் ஒன்றில் தங்கி இருக்கிறார். (ஒ-7)

### மற்றும் ஒரு துப்பறியும் குழு வருகிறது

கொழும்பு, ஆக. 31

ஸ்கொட்லாந்து யாட்டில் இருந்து இன்னொரு துப்பறியும் கோஷ்டி விரைவில் கொழும்பு வரவுள்ளது. (இ-எ)

### மாணவியின் சைக்கிள் அபேஸ்!

யாழ்ப்பாணம், ஆக. 31

டியூஷனுக்குத் தனியாகச் சென்ற மாணவியின் சைக்கிளை இரண்டு இளைஞர்கள் பறித்துச் சென்றனர்.

இச்சம்பவம் நேறறுமாலை 3மணியளவில் நல்லூர் சட்டநாதர் வீதியில்நடைபெற்றது.

இதற்கிடையில் நேறறு தேவாலயத்துக்குச் சென்ற மாணவி ஒருவர் ஆராதனை முடிந்து திரும்பியபோது அவரது சைக்கிள் ''சீட்'' மாயமாக மறைந்திருந்தது. (ஒ-7)

## வடமராட்சி அகதிகள் வள்ளங்களில் திரும்புகின்றனர்

வடமராட்சி, ஆக. 31

இந்தியாவில் அகதிகளாகத் தங்கியிருந்த வடமராட்சியைச் சேர்ந்தவர்கள் கடந்தசில தினங்களாக இங்கு வந்தவண்ணமுள்ளனர்.

இவர்களில் அனேக மாணவர்கள் அண்மைக்கால ''ஒப்பறேசன் லிபறேசன்'' தாக்குதலுக்குப் பயந்து தப்பி ஓடியவர்கள்.

சிறு, சிறு வள்ளங்களிலேயே இவர்கள் வருகின்றனர்.

இந்திய கடற்படையினர் பாதுகாப்புக் கொடுத்து இலங்கைக் கரைக்கு இவர்களைக் கொண்டு வந்து விடுகின்றனர் என்று அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இலங்கைக் கடற்படையினரிடம் மாட்டிக் கொள்ளும் சிலர், தங்களின் பிகுதியான சில உடமைகளையும் அவர்களிடம் பறிகொடுத்து விடுவதாகப் புகார் கூறப்படுகிறது.

### சுபநேரம்

31-8-1987
திங்கட்கிழமை
சுபநேரம்:
12.05 முதல் 1.35 வரை
ராகுகாலம்:-
7.35 முதல்- 9.05 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
மாலை 6-18க்கு மேல் அட்டமி

## கொதிக்கும் வெய்யிலில் பலாலி முகாம் வரை நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம்

அச்சுவேலி, ஆக. 31

மன்னாரில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மூவர் படுகொலை செய்யப்பட்டது, இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அமுலாக்கம், உள்ளூர்க் களவு, கொலை, சமூகவிரோதச் செயல்கள் ஆகியவற்றை கண்டித்து நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி பகுதிஊடாக நடத்தப்பட்டது.

புத்தூர் நிலாவரையில் ஆரம்பமாகிய இந்த ஊர்வலம் புத்தூர், அச்சுவேலி, இடைக்காடு பகுதி பொதுமக்களினால் ஏற்பாடு செய்து நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்ட ஊர்வலத்தினரிடம் பல்வேறு கோஷங்கள் அடங்கிய சுலோக அட்டைகள் காணப்பட்டன.

கோஷங்கள் எழுப்பிய வண்ணம் கொதிக்கும் வெயிலில் சென்று பலாலி இந்திய இராணுவ முகாமில் தமது கோரிக்கைகள் அடங் [6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★ ★★★★
★சின்னஞ் சிறு★
★ விளம்பரம் ★
★★★★ ★★★★

**விற்பனைக்கு**

பற்றறி சார்ஜர் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன் 326, பிரதானவீதி, யாழ்ப்பாணம். சென் பற்றிக் சந்தியருகில். (1579)

உபயோகித்த வீட்டுத் தளபாடங்கள் அலுமாரி, கட்டில், மெத்தைகள், Show-Case, பற்றறிசார்ஜர், Chopper சைக்கிள், சாப்பாட்டு மேசை கதிரைகள், கேக்மிக்சர், Baby Cot, ஹொல்செற், பிளாஸ்ரிக் கதிரைகள், Meat Safe, Stand Fan, கிளாஸ் வகைகள் மற்றும் பல உடன் மலிவுவிலையில் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன் 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம் சென்ட் பற்றிக் சந்தியருகில். (1580)

புனர்வாழ்வு அமைச்சின் சுற்றுநிருபப்படி

# திருமலை அகதிகளுக்கு உதவிகளை வழங்குக!

## அரச அதிபர்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஆக. 31

புனர்வாழ்வு அமைச்சு விடுத்துள்ள சுற்று நிருபத்தில் கூறப்பட்டுள்ளவாறு, சொந்த இடங்களுக்குத் திரும்ப விரும்பும் திருமலை அகதிகளுக்கு உதவிகளை வழங்க வேண்டும்.

முல்லைத்தீவு, யாழ் மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களுக்கு முன்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட அகதிகள் நலன்புரிச் சங்கம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இரண்டு அரச அதிபர்களுக்கும் அனுப்பிய கடிதத்தில் சங்கத் தலைவர் திரு எஸ் ஸ்ரீதரன் கூறியிருப்பதாவது:

சென்ற 21 ஆம் திகதி திருகோணமலைக் கச்சேரியில் நடைபெற்றமாநாடு ஒன்றில் புனர்வாழ்வு அமைச்சுச் செயலாளர் அஸ்டின் பெர்னாண்டோ பேசினார்.

யாழ், முல்லைத்தீவு மாவட்டங்களில் தங்கி உள்ள திருமலை அகதிகளை மீளக் குடியமர்த்த பின்வரும் உதவிகளை வழங்கப்படும் என்று அவர் சொன்னார். அந்த உதவிகள் வருமாறு:

1. பயணத்துக்கான ஒழுங்குகள் [பஸ் அல்லது ரயில் கட்டணம் அல்லது விசேடபஸ் ஒழுங்கு]

2- செலவாக ஒருகுடும்பத்துக்கு 75 ரூபா முதல் 100 ரூபாவரை வழங்குவது

3. இரண்டுவாரகால உணவுப் பொருள்கள்.

திருமலை திரும்பும் அகதிகளுக்கு யாழ், முல்லைத்தீவு மாவட்டங்களின் அரச அதிபர்கள் ஒரு குடும்பத்துக்கு மட்டுமே கொடுக்கின்றார்கள் என்பதை அமைச்சுச் செயலாளரின் கவனத்துக்குக் கொண்டுவந்தேன்.

இரண்டு சுற்று நிருபங்கள் சம்பந்தப்பட்ட அரச அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று செயலாளர் பதிலளித்தார்.

அப்பாந்தோட்டையில் இருந்து அகதிகளை மூதூர், தெஹிவத்தைக்குக் கொண்டுவர அம்பாந்தோட்டை உதவி அரச அதிபர் விசேட பஸ்ஸை ஒழுங்கு செய்து கொடுக்கின்றார் என்றும் செயலாளர் தெரிவித்தார்.

சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ளபடி திருமலை அகதிகள் சொந்தக் கிராமங்களுக்குத் திரும்புவர். இப்படி கடிதத்தில் விவரிக்கப்பட்டுள்ளது

(இ-எ)

## லொறிகளுக்கு தொல்லை தீரவில்லை!

யாழ்ப்பாணம் ஆக. 31.

லொறியில் பொருள்களைக் கொண்டு வருபவர்கள் வழியில் உள்ள சில முகாம்களில் தொடர்ந்தும் துன்புறுத்தப்படுவதாக முறையிடப்படுகின்றது.

லொறியில் உள்ள பொருள்களை ஏற்றி இறக்கும் போது சிலவற்றை எடுத்துக் கொள்வதும் இம் முகாம்களில் இடம்பெறுவதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கின்றது. (இ-எ)

## ஜனாதிபதியின் வீடு உடைப்பு; 18 பேர் கைது!

கொழும்பு ஆக. 31

வெலிகம பொலீஸ் பகுதியில் மிரிஸ்ஸ என்னுமிடத்தில் உள்ள ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் வீட்டைத் தாக்கப் பலத்த சேதம் விளைவித்த சம்பவம் தொடர்பாக பொலீஸார் 18 பேரைக் கைது செய்தனர்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான மறுநாள் 50 பேர் கொண்ட கோஷ்டி ஒன்று வீட்டைத் தாக்கி பலத்த சேதம் விளைவித்தது. தெரிந்ததே. (இ-எ)

நவாலி, மானிப்பாய்ப் பகுதி

## விவசாயிகள் கச்சான் செய்கையில் ஆர்வம்

நவாலி, மானிப்பாய் விவசாயிகள் இவ்வாண்டு பயிரிட்ட (நிலக்கடலை) கச்சான் செய்கையில் எதிர்பாராத அளவு வருவாய் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாப் பகுதிகளில் கச்சான் பயிரிடும் விவசாயிகள் பெரும்பாலும் ஒன்றுக்குப் பத்து என்ற அடிப்படையிலேயே அறுவடை செய்துவருகின்றனர்.

எனினும் வவுனியாப் பகுதிகளில் அதிக அழிவும் செலவும் ஏற்பட்டு வருவதனால் அங்குள்ள விவசாயிகளோடு நவாலி, மானிப்பாய்ப் பகுதி விவசாயிகளை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது நவாலி, மானிப்பாய்ப்பகுதி விவசாயிகள் அதிக அளவு வருவாயைப் பெற்றுவருவதாகவே கூறப்படுகிறது

(ஓ-161)

## நான்கு இலங்கையரும் கொழும்புக்கு

போதைவஸ்து கடத்தலில் ஈடுபட்ட நான்கு இலங்கையர்களை செக்கோஸ்லவேக்கியப் பொலீசார் கைது செய்து கொழும்புக்கு நாடுகடத்தினர்.

இரண்டு செக் துப்பறியும் நிபுணர்கள் நான்கு இலங்கையரையும் விமானத்தில் கொழும்புக்கு நேற்றுக் கொண்டு வந்து இரகசியப் பொலீஸாரிடம் கையளித்தனர்.

(இ-எ)

A/L 88
DAY CLASS
10-30 :- காவிகள்
11-45:- திரிகோண கணிதம்
ஆரம்பம்:
3 . 9 . 87
திரு. ரவிமோகன்
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும். பெருமாள் கோவிலுக்கும் இடையில்.) (1590)

# பிரபா மீண்டும் தமிழ் பேசும் மக்களுக்கு சேவையாற்ற வேண்டும்

## முஸ்லிம் கமாண்டோ அழைப்பு

மட்டக்களப்பு, ஆக. 31

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மீண்டும் தமிழ்ப் பேசும் மக்களுக்காக சேவையாற்ற முன்வர வேண்டும்.

மேற்படி அழைப்பை தமிழீழ விடுதலை முஸ்லிம் கமாண்டோ மட்டக்களப்பு - அப்பாறை அரசியல் பிரிவு விடுத்துள்ளது.

''தமிழ் — முஸ்லிம் மக்களின் தாயகக் கோரிக்கையைப் பொறுத்தவரை இணைப்பு என்ற பதம் பொருத்தமற்றது'' என்ற தலைப்பில் மேற்படி அமைப்பு விடுத்துள்ள பிரசுரமொன்றில்தான் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளது

அப்பிரசுர விவரம் வருமாறு:-

முஸ்லிம்களைப் பொறுத்தவரை கட்சிரீதியாகப் பிரிக்கப்பட்டு வாழ்கின்றார்கள் முஸ்லிம்களைக் கூறுபோட்டவர்கள் முஸ்லிம் அரசியல் தலைவர்கள்தான். எங்களுக்குச் சுதந்திரம் கிடைக்க வேண்டுமானால் அனைத்துப் பொறுப்புக்களும் இளைய தலைமுறையினரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

முஸ்லிம்களுக்கு மத்தியில் ஒரு சரியான அமைப்புமுறை இல்லாத குறை, அண்மைக்காலமாக இயங்கிவரும் 'தமிழீழ விடுதலை முஸ்லிம் கமாண்டோ படை'யினரினால் நிவர்த்திசெய்யப்பட்டது.

எமது அமைப்பு தமிழீழ தாயகத்திற்காக முஸ்லிம் மக்கள் மத்தியிலிருந்து போராட இருந்த வேளையில் இலங்கை – இந்திய சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தானது

இந்த நிலையில் நாம் ஆயுதப் போராட்டத்தை இடைநிறுத்தி விட்டோம். விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் மீண்டும் தமிழ்ப் பேசும் மக்களுக்காகச் சேவையாற்ற முன்வர வேண்டும்.

கடந்த நான்கு வருட விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்ட திருப்பம் தான் வடக்கு, கிழக்கு இணைந்த மாநில சுயாட்சி அரசு. எமது இயக்கத்தைப் பொறுத்தவரை தாயகம்தான் தீர்வு. அதில் தமிழ் – முஸ்லிம் மக்கள் சுதந்திரத்துடன் வாழவேண்டும். இந்திய அமைதி காக்கும் துருப்புக்களுடன் விடுதலைப் போராட்ட வீரர்களும் இணைந்து செயல்படவேண்டும். அதனால் இளைஞர்களை நிராயுதபாணிகளாக்கிவிட்டு அரசு மேற்கொள்ளும் தாக்குதல்களைத் தடுக்கலாம்.

தமிழ் – முஸ்லிம் மக்களின் தாயகக் கோரிக்கையைப் பொறுத்தவரை இணைப்பு என்ற பதம் பொருத்தமற்றது. திட்டமிட்ட இனக்கலவரங்களினால் தமிழ்-முஸ்லிம் மக்களை மோதவிட்டவர்கள் இஸ்ரேலிய மொஸாட் பயங்கரவாதிகளும், அரச துருப்புக்களும், சில காடையர் கூட்டமுமே. இனிமேல் அப்படி நிலைமை தோன்ற எமது கமாண்டோ இளைஞர்கள் அனுமதிக்கமாட்டார்கள்.

கிழக்கு முஸ்லிம்களைப் பொறுத்தவரை எம்மைக் கூறுபோட்டவர்கள் முஸ்லிம் அரசியல் தலைவர்கள்தான் இவர்களிடம் எமது மக்கள் சார்பில் கமாண்டோ இளைஞர்களின் வேண்டுகோள் ''சர்வஜன வாக்கெடுப்பு நடக்கும் காலம் எல்லைவரை உங்கள் அரசியல் நடவடிக்கைகளை இடைநிறுத்தி வையுங்கள். உங்கள் நடவடிக்கைகள் முஸ்லிம்கள் மத்தியில் பெரும் பிளவுகளை ஏற்படுத்துமென்பதை உங்களால் உணர முடியாது'' என்பதே ஆகும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-21)

இந்திய நிவாரணம்

## சுண்டுக்குளிப் பகுதிக்கு இவ்வாரம் கிடைக்கும்

### உதவி அரச அதிபர் நம்பிக்கை

குருநகர், ஆக. 31

யாழ் - உதவி அரசாங்க அதிபர் பகுதியில் இன்னமும் இந்திய நிவாரணப் பொருள்கள் வழங்கப்படாமல் உள்ள சுண்டுக்குளி, கொழும்புத்துறை கிராமசேவகர் பிரிவுகளுக்கு இவ்வாரம் வழங்கப்படலாம் என்று உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் நம்பிக்கை தெரிவித்தார்.

வடமராட்சியில் ஆறு கிராம சேவகர் பிரிவுகளுக்கும், தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பகுதியில் மூன்று கிராம சேவகர் பிரிவுகளுக்கும் இன்னமும் இந்திய நிவாரண உணவுப் பொருள்கள் வழங்கப் படவில்லை என்று தெரிவித்த அவர், அவற்றுக்கும் இவ்வாரம் மேற்படி உணவுப் பொருள்கள் வழங்கப்படலாம் என்றும் தெரிவித்தார்.

எனினும் போதிய பொருள்கள் இல்லாமையால் அநேகமாக அரிசி, மா போன்ற பொருள்கள் மட்டுமே வழங்கக் கூடியதாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

(ஓ-51)

## பலாலி பிரசைகள் குழு இந்திய அமைதிகாக்கும் அதிகாரிகளைச் சந்தித்தது

யாழ்ப்பாணம், ஆக. 31

பலாலிப் பிரசைகள் குழு இந்திய அமைதி காக்கும் படை உயர் அதிகாரிகளைச் சந்தித்து பல விஷயங்களைப் பற்றி ஆலோசனை நடத்தியது.

பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

★ காங்கேசன்துறை [illegible] இ.போ.ச. பஸ், மினிபஸ்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கான ஒழுங்குகளைச் செய்வது.

★ பலாலி மத்தி சித்தி விநாயகர் வித்தியாசாலையைப் புனர் நிர்மாணஞ் செய்து சிறப்பாக இயங்க நடவடிக்கை எடுப்பது.

★ கீழ்க் குறிப்பிடப்படும் பெயர்களுக்குரிய [illegible] கள் பலாலி, வயாவிளான் [illegible] இராணு

[5 ஆம் பக்கம் பார்க்க]

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை
காங்கேசன்துறை

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையில் இருந்து சீமெந்துப் பொதிகள் (Railway Waggon) ஏற்றி யாழ்ப்பாண புகையிரத நிலையத்திலுள்ள புகையிரதப் பெட்டியில் ஏற்றுவதற்கான

கேள்விப் பத்திரம்

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையில் இருந்து சீமெந்துப் பொதிகளை லொறிகள் மூலம் யாழ்ப்பாண புகையிரத நிலையத்திற்கு கொண்டு சென்று புகையிரதப் பெட்டிகளில் ஏற்றுவதற்கு கேள்விப்பத்திரங்கள் லொறிச் சொந்தக்காரர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

மேற்படி கேள்விப்பத்திரங்கள் விநியோக உத்தியோகத்தர் காரியாலயத்தில் கிழமை நாட்களில் காலை 8-00 மணி தொடக்கம் மாலை 4-00 மணி வரையும் மீளப்பெற முடியாத வைப்புப்பணமாக ரூபா 50/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 1987-09-03ம் திகதி மாலை 4-00 மணிவரை நிதி விநியோகிக்கப்படும்.

கேள்விப்பத்திரகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1987-09-04ம் திகதி காலை 10-30 மணிக்கு கேள்விப்பத்திரகாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

தொழிற்சாலை முகாமையாளர்,
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை.

1987-08-29

HORIZON ENTERPRISES

A. பத்மதாஸ்

பிரயாண ஒழுங்குகள்

எமது கிளைக் காரியாலயம் புளியங்கூடல் சந்தியில் அண்மையில் திறக்கப்பட இருந்ததும், நாட்டின் சூழ்நிலைகாரணமாக பிற்போடப்பட்டிருந்ததும் அனைவரும் அறிந்ததே. இக் கிளைக்காரியாலயம் இப்பொழுது திறக்கப்பட்டு இருப்பதை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம் இக் காரியாலயம் தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையும் எல்லா நாட்களிலும் திறந்திருக்கும். நாம்மேற் கொள்ளும் அனைத்து நாடுகளுக்குமான வேலை வாய்ப்புகளும் உதவிமுகவர் நிலையமின்றி நேரிலேயே அனுப்பும் [Main] தலைமை முகவர் நிலையம் என்பதை மறந்துவிடாதீர்கள்.

மற்றும் எதிர்வரும் 15. 09. 87 திகதிக்கு முன்னர் அபுதாபி நாட்டிற்கும் மாலைதீவிற்குமான பின்வரும் வெற்றிடங்கள் உண்டு. இவற்றிற்கான வேலைவாய்ப்புடன் செல்ல விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

★ அபுதாபி ★
ABUDHABI
★ அபுதாபி ★

1 ஆஸ்பத்திரி துப்புரவாளர்
Hospital Cleaners

மாலைதீவு MALDIVES மாலைதீவு

1. குளிரூட்டல் மெக்கானிக் இயக்குவதில் அனுபவம் தேவை
Refrigeration Mechanic
Experience in Operating
7.5 K. W. Compressors
25 Vessels
Long Periods at Sea.

★ உணவு, இருப்பிடவசதி இலவசம். பாஸ்போட், 16 புகைப்படங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும். முற்பணம் அறவிடப்பட மாட்டாது.

சாரதி அனுமதிப் பத்திரம்

வாகனச் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாதவர்களுக்கும், வாகனம் செலுத்தத் தெரியாதவர்களுக்கும் வாகனம் செலுத்தப் பழக்கியும் 3 நாட்களில் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும். எமது முகவர் நிலையத்தினால் வெளிநாடு செல்பவர்களுக்கு மட்டுமே இச் சலுகை வழங்கப்படும்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு மட்டுமே வேலை வாய்ப்புடன் பிரயாண ஒழுங்குகள் செய்யும் பிரதான முகவர் நிலையம்.

பிரதி வாரமும் பிரயாணம் செய்தவர்களின் பெயர் விவரங்களை வெளியிடும் ஒரேயொரு பிரயாண முகவர் நிலையம்.

எல்லா நாட்களிலும் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை எமது அலுவலகம் திறந்திருக்கும். கடித மூலம் விபரம் பெற விரும்புவோர், சுய விலாசம் இட்ட முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்ளவும்.

★ தலைமைக் காரியாலயம்:-
A. பத்மதாஸ்
97, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

கிளைக் காரியாலயம்:-
A. பத்மதாஸ்
ஊர்காவற்றுறை வீதி,
புளியங்கூடல் சந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டுப் படுகொலைகளுக்கு உரிய நஷ்டஈடு கிடைக்குமா?

> ஹாட்லிக் கல்லூரி மற்றும் திக்கம் நூலகங்கள் எரிக்கப்பட்டு நாளையுடன் 3 வருடங்கள் பூர்த்தியாகின்றது.

திக்கத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்ட கவச வாகனங்களில் கொலையுண்ட தமதுசகாக்களின் நிமித்தம் பழிவாங்கும் எத்தனமாக 2000 புத்தகங்களைக் கொண்ட திக்கம் நூலகத்தை எரித்து அழித்த ஸ்ரீலங்கா பாதுகாப்புப்படையினர், பருத்தித்துறை முகாம் திரும்பியதும், வடமராட்சியின் புகழ் மிக்க ஹாட்லி கல்லூரியின் நூலகத்தையும், அதன் நூற்று ஐம்பது வருட காலப் புத்தகச் சேர்வுகளுடன் 1984 செப்டெம்பர் முதல் நாளில் தானம்செய்தனர்.

பண்பாட்டுப்படுகொலையாக அழிக்கப்பட்ட மேற்படி இரு அறிவால

**வேந்தன்**

யங்களும் இன்னமும் அழிந்த நிலையிலேயே கைவிடப்பட்டுள்ளன.

ஹாட்லிகல்லூரி அதன் சொந்தக் கட்டடங்களில் இயங்கமுடியாது மாற்றுக இரவல் கட்டடங்களில் தனது கல்விப்பணியைத் தொடரவேண்டிய நெருக்கடி நீடித்திருக்கிறது.

முழு வடமராட்சி மக்களாலும் தமது சொத்தாக பேணப்பட்டுவந்த ஹாட்லிக் கல்லூரியின் நூலகத்தையும், ஆயிரக்கணக்கான புத்தகங்களுடன் அழிக்கப்பட்ட திக்கம் பொது நூலகத்தையும் மீள்வித்துப் புதுப்பிப்பதற்கு இந்த நினைவு தினத்தில் சங்கற்பம் செய்யவேண்டும்.

எரிக்கப்பட்ட யாழ். பொதுநூலகத்திற்கு லயனல் பெர்னாண்டோ விசாரணைக் குழு சிபார்சு செய்திருந்த ஒரு கோடி ரூபா நஷ்ட ஈட்டுத் கொகையை அப்போது பதவியில் இருந்த யாழ். மாநகரசபை கோட்டை விட்டதற்கு யாழ்ப்பாணநகர வரியிறுப்பாளர்களது அசமந்தமும், விழிப்புணர்வற்ற தன்மையுமே பெரிதும் காரணம்.

அத்தகைய அவலநிலை ஹாட்லி, திக்கம் மற்றும் காரைநகர் 'குளோப் நூலகம்' போன்ற—பாதுகாப்புப் படையினரால் அழிக்கப்பட்ட - ஏனைய அறிவாலயங்களுக்கும் சம்பவியாது காத்துக் கொள்ளவேண்டும்.

சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் இப்போதிரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகத்தில் ஸ்ரீலங்கா இராணுவம்

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் சுன்னாகம் சந்தைக்கு வந்து பொருள்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

பலாலி, வயாவிளான் இராணுவ முகாம்களைச் சேர்ந்த இராணுவத்தினரே ஜீப்பில் வந்து பொருள்களை வாங்கிச் செல்கின்றனர்.

இவர்கள் ஆயுதம் இன்றிச் சிவிலிலேயே வருகின்றனர். (ஒ)

# வர்த்தக ஆதிக்கத்தை முறியடித்த நியூஸிலாந்து அரசு

எவ்வளவுபிரசித்தமான தீர்ப்பு-பிரதமர் டேவிட் லாங்கே இப்படி மகிழ்ச்சியுடன் கூறினார்.

நியூஸிலாந்து நாட்டின் கவர்ச்சிப் பிரதமர் இவர்.

அண்மையில் அவரின் தொழில் கட்சி மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

40 ஆண்டுகளில் இரண்டாவது முறையாக ஆட்சியைப் பிடிக்க உதவியது திரு. டேவிட் லாங்கேயின் தலைமையே.

அவரின் சுதந்திர சந்தை பொருளாதாரத் திட்டமே கூடுதல் வாக்குகளைப் பெறக் காரணமாக இருந்தது.

நியூஸிலாந்து அரசியலின் அடிப்படையாகக் கருதப்பட்டு வந்த வர்த்தக ஆதிக்கத்தையே முறியடித்துவிட்டோம்— இப்படிப் பெருமைப்பட்டார்

> பசுபிக் சமுத்திரப் பிராந்திய நாடுகளில் ஒன்று நியூஸிலாந்து.
>
> ஒரு லட்சத்து நான்காயிரம் சதுர மைல் விஸ்தீரணம்கொண்ட தீவு இது.
>
> சுமார் 40 லட்சம் மக்கள் வாழுகின்றனர்.
>
> தலைநகரம் வெல்லிங்டன்.
>
> அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பிரதமர் லாங்கே தலைமையிலான தொழில் கட்சி மீண்டும் பதவிக்கு வந்தது.

**உருளும் உலகில்**

பிரதமர்டேவிட்லாங்கே.

தொழிற் கட்சியின் வெற்றி அமோகமானதாக இல்லை.

97 உறுப்பினர் கொண்ட நாடாளுமன்றத்தில் 15 உறுப்பினர் பெரும்பான்மையே தொழிற் கட்சிக்குக் கிடைத்துள்ளது,

வருமானவரியைக்குறைத்து நுகர்வு வரிவிதிப்பதற்கு வழிவகுத்த பொருளாதாரத் திட்டமே, மீண்டும் தேர்தலில் வெற்றி பெற்றவுடன் தொடர்ந்து அமுல்நடத்தப்படும் என்று தேர்தல் பிரசாரத்தின் போது பிரதமர் லாங்கே வலியுறுத்தினார்.

இப்பிசாரத்தை முறியடிக்க முடியாத நிலை எதிர்கட்சியான தேசியக் கட்சிக்கு ஏற்பட்டது.

அணு ஆயுதங்களுக்கு எதிரான கொள்கையையே பிரதமர் லாங்கே அரசு முன்னர் கடைப்பிடித்துவந்தது.

மீண்டும் அவர் ஆட்சிக்கு வந்தது அக் கொள்கை தொடர்ந்து

**எஸ் ஜி.**

அமுல் நடத்தும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

அணுஆயுத எதிர்ப்புக் கொள்கை காரணமாக அமெரிக்கா, ஆஸ்த்திரேலியாவுடன் ஏற்படுத்திக் கொண்ட பாதுகாப்பு உடன்படிக்கையை நியூஸிலாந்து முறித்துக் கொண்டது.

இன்னொரு மூன்று

(4ம் பக்கம் பார்க்க)

# ஸ்ரீலங்கா மேற்கொள்ளும் அச்சுறுத்தல் நடவடிக்கை

## ஈழவர் முன்னணி அறிக்கை

இலங்கை - இந்திய அரசுகளிடையே ஏற்பட்ட ஒப்பந்தங்களின் பிரகாரம் விடுதலை அமைப்புக்கள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்றும்—

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டோர் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும்—

இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் மீளக் குடியேறக் கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் இணக்கம் காணப்பட்டிருக்கிறது.

கடந்தகால உடன்பாடுகள் போலல்லாது இவ்வுடன்பாட்டின் உள்ளார்ந்த அம்சங்களையும் அதன் சர்வதேச முக்கியத்துவத்தையும் உணர்ந்துள்ள ஈழப்புரட்சி அமைப்பும் ஏனைய அமைப்புகளும்இவ்வுடன்பாட்டு அமுலுக்கு குந்தகம் ஏற்படுத்தும் சக்தியாக இருக்கக் கூடாதென்ற வகையில் தமது ஆயுதங்களை உங்களிடம் ஒப்படைத்து இருக்கின்றன.

ஒப்பந்தத்தை மதிக்கும்

> கடந்த சனிக்கிழமை காலை யாழ் நகரில் நடைபெற்ற பேரணி ஒன்றின் முடிவில் இந்திய சமாதானப் படை பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் ஹர்கிர்த்சிங்கிற்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒனறை ஈழவர் முன்னணி இந்திய அதிகாரியிடம் சமர்ப்பித்தது-
>
> அந்த மகஜரின் முழு உள்ளடக்கமும் இங்கு பிரசுரமாகிறது-

எமது மனோபாவத்தை உணர மறுக்கும் ஸ்ரீலங்கா அரசு அதற்கு மாறுன முரணுன செயல்களில் ஈடுபட்டு வருகிறது. தமிழ்பேசும் மக்களையும் அச்சுறுத்தும் வகையில் நடந்துகொண்டும் வருகிறது.

உடன்பாட்டின்படி தற்போது சிறைகளில் உள்ள- பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் சிங்கள மொழி பேசும் கைதிகள்- அனைவரும் மன்னிக்கப்பட்டவர்களே. இவர்களை அவர்களது இருப்பிடங்களுக்கு செல்லவிடாது இன்னமும் தடுத்து வைத்திருப்பது நியாயமானதல்ல.

உடன்பாட்டின்படி கைதிகள் விடுதலைக்கும் ஆயுத ஒப்படைப்பிற்கும் இடையே பரஸ்பர நிபந்தனை எதுவும் இல்லை. அப்படியிருந்தும் இவற்றிடையே முடிச்சுப் போட முனையும் சிறிலங்கா சிறை அதிகாரிகளின் பத்திரிகைக் கூற்றுக்கள் எமது சந்தேகங்களை வலுப்படுத்தி உள்ளன.

மேலும் கைதிகள்மீது மறைமுகமாக உணவுத் தடை செய்வதும், கொலைப் பயமுறுத்தல் விடுவதும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த மறுப்பதும் நடந்து வருகின்றன.

இந்நிலையில் சிறைக் கைதிகள் துரிதமாக விடுவிக்கப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை. முழுக்கைதிகளும் விடுதலை செய்யப்படும் வரை தமிழ் – சிங்கள மொழி பேசும் மக்களின் அரசு சார்பற்ற பிரதிநிதிகளையும் சமாதானப் படையையும் உள்ளடக்கிய கண்காணிப்புக் குழு ஒன்று நியமிக்கப்பட்டு சிறைகளைக் கண்காணித்து வரவேண்டும்.

கைதிகள் விடுதலை விவகாரத்தில் இழுத்தடிப்புக்களும், அச்சுறுத்தல்களும் புரிந்துவரும் சிறிலங்கா அரசு திருமலைப் பகுதியில் அவசர சிங்களக் குடியேற்றங்களையும் செய்து வருகிறது.

திருகோணமலை முதல் முல்லைத்தீவு வரையான பாதையில், முந்திரிகைக் குளம் இராணுவ முகாமை தரிப்பிடமாகக் கொண்டு நாளொன்றுக்கு 50 முதல் 100பேர் வரையான — ஆயுதப் பயிற்சி பெற்றவர்களை — உள்ளடக்கிய சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். புராதன தமிழ் கிராமங்களில் அத்துமீறிக் குடியமர்த்தப்படும் இவர்கள் முன்னெப்பொழுதும் இப்பகுதிகளில் குடியிருக்காதவர்களே.

வடக்கு — கிழக்கு இணைப்பை வலுவிளக்கச் செய்ய வேண்டுமென்ற நோக்கோடு நடாத்தப்படும் இக்குடியேற்றங்களை நாம் ஆட்சேபிக்கின்றோம். இதுஒரு புனர்வாழ்வு நடவடிக்கை அல்ல. அச்சுறுத்தும் நடவடிக்கையே இதனைத் தடுத்து நிறுத்த ஆவன மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம். (உ)

## நாகிரெட்டிக்கு விசேஷ விருது

சென்னை, ஆக. 31

பிரபல சினிமா தயாரிப்பாளர் பி. நாகிரெட்டிக்கு 1986ஆம் ஆண்டுக்கான தாதாசாகிப் பால்கே விருது வழங்கப்பட்டுள்ளது.

தங்கத்தாமரையும் ஒரு லட்சம் ரூபா பணமுடிப்பும் கொண்டது இந்த விருது.


தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு, ஹிந்தி மொழிகளில் பல படங்களை இவர் தயாரித்திருக்கின்றார்.

தென் இந்தியாவிலேயே மிகப் பெரிய ஸ்ருடியோவான 'வாஹினி'யின் அதிபர் இவர். (உ-எ)

## சிங்களவர் நியமனம்

யாழ்ப்பாணம், ஆக. 31

காங்கேசன் துறை லங்கா சிமெந்துத் தொழிற்சாலையில் பாதுகாப்பு ஆலோசகராக சிங்களவர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ஒ)



**பொய்யாமொழி**

**குறள்:**

வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி.

**பொருள்:**

உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை நோக்கி வாழ்கின்றன; அதுபோல் குடிகள் எல்லாம் அரசனுடைய செங்கோலை நோக்கி வாழ்கின்றனர்.


# NEW MASTER INSTITUTE

**B. M. C. Lane, JAFFNA.**

**88 A/L DAY CLASS**

பிரிவு 1 ஆரம்பம்;- 01-09-1987 நாளை காலை 8 30 மணி

★ எமது வழமையான ஆசிரியர் குழு ★

| | |
|---|---|
| PHYSICS | ★ திரு. சத்தியசீலன் |
| CHEMISTRY | ★ திரு. மக்ஸி |
| BOTANY | ★ திரு.செல்வநேசன் |
| ZOOLOGY | ★ திரு. நாகநாதன் |
| PURE & APPLIED MATHS | ★ திரு. A. பத்மநாதன் |

| | | |
|---|---|---|
| 8-30 | 9-30 | ● PHYSICS |
| 9-30 | 10-30 | ● CHEMISTRY |
| 10-30 | 11-30 | ● Zoology |
| 11-30 | 12-30 | ● Botany |
| 10-30 | 11-30 | ● PURE & APPLIED MATHS |
| 11-30 | 12-30 | |

பிரிவு II ஆரம்பம்:- 19-09-87 காலை 8-30 மணி

**241, Navalar Road, JAFFNA.**

**88, 89 A/L Weekend Class** நடைபெறுகின்றன.

★ எமது வழமையான ஆசிரியர் குழு ★

| | |
|---|---|
| Physics | திரு. வர்ணம் |
| Chemistry | திரு. தில்லைநாதன் |
| Botany | திரு. குகாதரன் |
| Zoology | திரு. நாகநாதன் |
| Pure & Applied Maths | திரு. நல்லையா |

**88 A/L**

| | | | |
|---|---|---|---|
| 7 30 | 8 30 | physics | வெப்பவியல் |
| 8 30 | 9 30 | Botany | நுண்ணங்கி உலகம் |
| 9 30 | 11 30 | Zoology | நரம்புத்தொகுதி |
| 11 30 | 12 30 | chemistry | சேதனஇரசாயனம் |
| 12 30 | 1 30 | physics | வெப்பவியல் |
| 1 30 | 2 30 | Botany | தாழ்வகை தாவரம் |
| 2 30 | 4 30 | Zoology | முளையவியல் |
| 9 30 | 11 30 | Pure & applied Maths | |

**89 A/L**

| | | | |
|---|---|---|---|
| 7 30 | 9 30 | Zoology | தொகுதிகள் |
| 9 30 | 10 30 | Botany | |
| 10 30 | 11 30 | chemistry | பொது இர. |
| 11 30 | 12 30 | Physics | ஒளியியல் |
| 12 30 | 1 30 | Botany | உருவவியல் |
| 1 30 | 2 30 | Zoology | தொகுதிகள் |
| 1 00 | 3 00 | Pure & Applied Maths | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் சுங்க அலுவலகத்திற்கு முன்னுள்ள

# அரச காணியில் குடியேறியோர் வெளியேற்றப்படுவர்

குருநகர், ஆக 31. யாழ் சுங்கத் திணைக்களத்திற்கு முன்பாக அரச காணிகளில் அத்துமீறிக் குடியேறிவருபவர்களை உடனடியாக அகற்றுவதற்கான நடவடிக்கைகள் யாழ் செயலகத்தால் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

அதற்கான உத்தரவை யாழ் அரசாங்க அதிபர் மாவட்டக் காணி அதிகாரிக்கும் யாழ் உதவி அரசாங்க அதிபருக்கும் அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

குருநகர் இளைஞர் கலைக் கழகத்தால் மேற் குறித்த விடயம் சம்பந்தமாக அனுப்பிவைக்கப்பட்ட மகஜருக்கு யாழ் அரசாங்க அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் பதில் எழுதியுள்ளார். அக்கடிதத்தில் மேற்கொள்ளப்பட இருக்கும் நடவடிக்கைகள் குறித்து அரசாங்க அதிபர் விளக்கம் அளித்துள்ளார். (ஓ-51)

## நிவாரணம் வழங்கும் விடயத்தில் பாரபட்சம்

### அரச அதிபருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஆக, 31. கொட்டடிப் பகுதி மக்களுக்கு இந்திய நிவாரணப்பொருள் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுகிறது.

இவ்வாறு கொட்டடி ஸ்ரீ மீனாட்சி சனசமூக நிலைய முதல்வர் திரு. எஸ். விஜேரட்ணம் யாழ். அரச அதிபருக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இந்திய நிவாரணப் பொருள்கள் இப்பகுதிகளுக்கு முழுமையாக வழங்கவில்லை என்றும், குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிவாரணப் பொருள்கள் மக்களுக்கு கிடைக்கத் தவறும் பட்சத்தில் மாற்று நடவடிக்கையில் இறங்க நேரிடும் என்றும் யாழ் அரச அதிபருக்கு எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது! [ஓ 10]

## நல்லுறவை வளர்க்கும் புதிய திட்டம் அறிமுகம்

அம்பாறை, ஆக, 31 அம்பாறை மாவட்டத்தில் வாழும் தமிழ் – முஸ்லிம் மக்களிடையே நல்லுறவுகளை வளர்க்கும் செயல்திட்டம் ஒன்றை நிந்தவூர் லயன்ஸ் கழகம் நடைமுறைப் படுத்த இருக்கின்றது.

கழகத்தின் நிரந்தர செயல்திட்டமாக மேற்கொள்ளப்படவிருக்கும் இந்த தமிழ் – முஸ்லிம் நல்லுறவை வளர்க்கும் செயல்த்திட்டம் தொடர்பாக பல்வேறு நிகழ்ச்சிகளையும் மாவட்டரீதியில் கழகம் நடத்த இருக்கின்றது.

திட்டத்தின் முதல் அங்கமாக அம்பாறை மாவட்டத்தின் தமிழ், முஸ்லிம் பகுதிகளிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்துவதற்கான ஆரம்பநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## ● இவர்கள் ஐவரும் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்

### ஈ. என். டி. எல்.எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 31 ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியில் இயங்கிவந்த திரு டக்ளஸ் தேவானந்தா, திரு. ஈஸ்வரன், திரு. அசோக், திரு. ரமேஷ், திரு. தங்கராசா ஆகியோர் இயக்க நடவடிக்கைகளில் இருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர் என மேற்படி இயக்க செயலாளர் திரு. சா. ஆதவனால் ஒப்பமிட்டு அறிக்கை ஒன்று வெளியிடப் பட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியில் இயங்கி வந்த தோழர்களாகிய ஈஸ்வரன், டக்ளஸ் தேவானந்தா, அசோக், ரமேஷ் தங்கராசா ஆகிய ஐவரையும் கீழ்க்காணும் காரணங்களை முன்னிட்டு இயக்கம் சம்பந்தமான சகல நடவடிக்கைகளிலிருந்தும் 7-8-1987 முதல் இடை நிறுத்தம் செய்கிறோம்.

1. இயக்கத்தை பிளவு படுத்துவதற்குக் குழுச் சேர்ந்தமை.

2. தளத்திற்குச்செல்ல விருந்த தோழர்கள் மத்தியில் வதந்திகளைப் பரப்பி தளத்திற்குச் செல்வதைத் தடுக்க முயற்சித்தமை.

3. ஈஸ்வரன், டக்ளஸ் தேவானந்தா, அசோக், ரமேஷ், தங்கராசா ஆகிய ஐவரும் இணைந்து இயக்கத்தைக்கைப்பற்றுவதற்கான இரகசியத் திட்டம் தீட்டியமை.

4. ஈ. என். டி. எல். எவ்-இல் இயங்கிக்கொண்டு சக இயக்கமான ஈ. பி. ஆர். எல். எப்-இன்பெயரில் அவர்களது அனுமதியின்றி சுவரொட்டிகளை சென்னை முழுவதும் ஒட்டி இயக்கங்களிடையில் ஏற்படும் ஒற்றுமையைத் தகர்க்க முயற்சித்தமை–

ஆகியவற்றுடன் மேலும் பல குற்றச் சாட்டுக்களை ஆதாரமாகக் கொண்டு மேற்காணும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் அறியத்தருகின்றோம்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஓ)

## அமிரின் சேவைகளை மறக்கச் செய்வது மிகவும் கஷ்டமானது

### பிறந்ததின விழாவில் பேச்சு

வட்டுக்கோட்டை, ஆக. 31 தமிழினத்தின் விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கடந்த நாற்பது வருடங்களாக தொடர்ச்சியான சேவை செய்த பெருமை தளபதி அமிர்தலிங்கம் அவர்களையே சாரும். அவர் மக்களுக்குச் செய்த சேவைகளையும் தியாகங்களையும் மக்கள் மனதிலிருந்து அடக்கு முறைகளால் மறைத்துவிடலாமெனச் சிலர் முயற்சிக்கின்றனர். இது மிகவும் கஷ்டமானது.

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களின் 60 ஆவது பிறந்ததின விழாவில் பண்டிதர் ப. இராசகுரு பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

பண்ணாகம் விசவத்தனை முருகன் ஆலயத்தில் (26-8-87ல்) இவ்விழா நடைபெற்றது.

பண்ணாகம் கல்வி, கலை, கலாச்சார ஒன்றியம் இவ்விழாவை ஏற்பாடு செய்திருந்தது.

ஒன்றியத் தலைவர் திரு பொ. சுந்தரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழா விசேட அபிஷேகம் கூட்டுப்பிரார்த்தனை ஆகிய சமய நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடைபெற்றது.

பண்டிதர் ப. இராசகுரு தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:–

தமிழினத்தின் விடுதலைக்காக தமது உடல் பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து தொண்டாற்றியவர் தளபதி அமிர்தலிங்கம், அமிர்தலிங்கத்தின் தளராத தொண்டினாலேயே தமிழினம் விழிப்படைந்தது. அன்னார் நீடூழி காலம் வாழ்ந்து தொடர்ந்து சேவையாற்ற இறைவன் அருள் புரிய வேண்டும் —என்றார்.

யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை முன்னாள் உறுப்பினரும் வட்டுக்கோட்டைத் தொகுதி தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கத் தலைவருமான திரு சு. நடேசு உரையாற்றுப்போது கூறியதாவது:-

''தம்பி பிரபாகரன் இதுவரை அமிரைப் பற்றியோ, தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பற்றியோ ஒருவிதமான அறிக்கையும்விடவில்லை. அவ்வளவுக்கு அமிரும் பிரபாகரனும் தமது நிலைகளை உணர்ந்து செயற்படுகின்றனர்.

ஆசனங்கள் பிரதானமல்ல, தமிழர் விடிவே பிரதானமானது. எனவே சகல தமிழ் மக்களும் குறிக்கோளை நன்கு உணர்ந்து தமிழர் விடிவுக்காகத்தொண்டாற்ற முன்வரவேண்டும்'' என்றார்.

பண்டிதர் அ. ஆறுமுகம், திரு எஸ். இராமநாதன், சமாதான நீதிவான், திரு வீ தெய்வேந்திரம்பிள்ளை ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினார்கள். (ஓ-12)


## பிரயாண ஒழுங்குகள்

★ குவைத் ★
★ KUWAIT ★

☆ இதுவரைகாலமும் எதிர்பார்த்திருந்த 'BES' KUWAIT பிரயாண ஒழுங்கு தயார் நிலையில் இருப்பதால் இது சம்பந்தமாக PASSPORT தந்து PRE SELECTION செய்யப்பட்டதவர்களும் PASSPORT தந்துள்ளவர்களும் உடனடியாக சந்திக்கவும்

☆ மேலும் இதற்கு LABOURERS தேவையாக இருப்பதால் விருப்பமுள்ளவர்கள் உடனே தொடர்புகொள்ளவும்.

★ வயதெல்லை 20 – 42
★ கால எல்லை 4 வருடங்கள்
★ உணவு இருப்பிடவசதி இலவசம்
★ சம்பளம் 40KD (1 KD — 106 SR
★ நேர்முகப் பரீட்சை முடிந்ததும் 10 நாட்களில் பிரயாணம்

HEAD OFFICE :

Construction & Development Company Ltd.

37, S. DE S Jeyasinghe Mawatha, NUGEGODA.

தொடர்பு : Licence No. 96

V. P பாலசுப்பிரமணியம்

V. P. பாலா

c/o N. V. பொன்னுத்துரை

கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.


## பயிற்சியில் ஈடுபட்டிருந்த 9 பேர்கைது!

கொழும்பு, ஆக. 31 கனேமுல்லை என்னும் இடத்தில்துப்பாக்கிசுடும் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் ஒன்பது சிங்கள இளைஞர்களை சம்பஹாப் பொலிஸார் அண்மையில் கைது செய்தனர்.

கைவிடப்பட்ட வீடு ஒன்றில் இருந்து வெடி மருந்துகளையும் பொலிஸார் கைப்பற்றினர். (ஒ-எ)

## பனை அபிவிருத்தி குறித்து

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் ஆக 31 ஆய்வு நிறுவனம் வடக்கு, கிழக்கின் பனை அபிவிருத்தி பற்றி இலங்கைப் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசாவுடன் கலந்துரையாடல்ஒன்றை நடத்தியது.

இக் கலந்துரையாடலில் பனைவள அபிவிருத்திக்குஎந்தெந்த வகையில் ஆய்வுகள் நடத்தவேண்டும் என்பது பற்றியும் உற்பத்திகள், அபிவிருத்திகள் எந்த அளவிற்கு மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றியும் ஆராயப்பட்டது.

பனை அபிவிருத்திச் சபையின் அபிவிருத்திப் பிரிவு, உற்பத்திப்பிரிவு, சந்தைப்படுத்தும் பிரிவுகளின்செயற்பாடுகளுக்கு ஆய்வு நிறுவனம் எந்த அளவிற்கு உதவும் என்பது பற்றியும்ஆலோசிக்கப்பட்டது. (ஓ)

## பொறுப்பதிகாரி இடமாற்றம்

கொழும்பு, ஆக. 31 தென இலங்கையில் ஆளும் கட்சி அரசியல்வாதி ஒருவரின் வீடு தாக்கப்பட்டது, கொள்ளையிடப்பட்டது ஆகியன தொடர்பாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஒருவர் இடமாறறம் செய்யப்பட்டார்.

இச்சம்பவம் பற்றி முறையிடப் பட்டவுடன் நடவடிக்கை எடுக்கத் தவறினார் என்ற காரணத்துக்காகவே அவர் இடமாற்றம் செய்யப் பட்டார் என்று தெரிய வந்துள்ளது. (உ எ)

## தமிழ்ப் பொலிசாரிடம் இப்படியும் ஒருகேள்வி!

கொழும்பு, ஆக. 31 வடக்கு, கிழக்கில் சேவை செய்ய விரும்புகிறீர்களா?

அப்படியானால் எங்கு சேவை செய்ய விரும்புகின்றீர்கள்?

இப்படி தமிழ்ப் பேசும் பொலிசாரிடம் கேட்கப் பட்டிருக்கிறது.

தமிழ், முஸ்லிம்பொலிஸாருக்குப் பொலிஸ் திணைக்களம் கேள்விக் கொத்து ஒன்று அனுப்பி வைத்திருக்கின்றது. அதிலேயே இந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது.

அடுத்த மாதம் முதல் திகதிகு முன்னர் இவ் விவரங்களை தந்துதவும்படி கோரப்பட்டுள்ளனர்,

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் செல்ல விரும்பாவிடின் அதற்கான காரணத்தையும் தரும்படியும் தமிழ், முஸ்லிம் பொலிசார் கோரப் பட்டுள்ளனர்.

பொலிஸ் சேவைக் காலத்தில் தற்சமயம்500 க்குக் குறைவான தமிழரே பணியாற்றுகின்றனர்.

அவர்களில் ஒருவர் பிரதி பொலிஸ் மா அதிபர், பத்துப்பேர்பொலிஸ் அதிபர்கள்ஆவர். (அ–எ)

## கிழக்கில் இருந்து வடக்கிற்கு சொகுசு பஸ் சேவை நடத்துவேன்

### மசூர் மௌலானா சொல்கிறார்

கல்முனை, ஆக. 31 ''கிழக்கில் பொத்துவிலில் இருந்து வடக்கில் காங்கேசன்துறை வரை சொகுசு பஸ் சேவையையும், மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம் வரை தனியான ரயில் சேவையும்நடத்துவேன்''

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் போக்குவரத்து இணைப்பதிகாரியாக ஜனாதிபதியால் நியமனம் செய்யப்பட்டுள்ள ஜனாப் மசூர் மௌலானா வெள்ளியன்று தனது முதல் உத்தியோகவிஜயத்தை மேற்கொண்டு கல்முனையிலுள்ள கிழக்குப் பிராந்திய போக்குவரத்து தலைமை அலுவலகத்துக்கு வருகை தந்திருந்தார்.

அப்போது உதயன் செய்தியாளரிடம் தனது திட்டங்களைப் பற்றிக் கூறுகையில் மேற்கண்டவாறு அவர் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்:–

போக்குவரத்துஅமைச்சர் 400 பஸ்களைப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றார். அவர் அவைகளைப் பெற்றதும் 200 பஸ்களை வடக்கு கிழக்குக்கு என கேட்டுப் பெற்றுக் கொள்ள இருக்கிறேன்.

இவைகளிற் சிலபஸ்களை சொகுசு பஸ்களாக மாற்றி கிழக்கிலிருந்து வடக்கிற்கும், வடக்கிலிருந்து கிழக்கிற்கும் சேவைக்குவிட உள்ளேன்.

சமயா சமய ஊழியர்களாக பஸ் டிப்போக்களில் கடமையாற்றும் தொழிலாளர்களின் வேதனம்,நிரந்தரசேவை பற்றியும் நடவடிக்கை எடுக்க உள்ளேன்.

இவ்வாறு அவர் கூறினார். (ஓ-84)

## 246 மாணவர் பட்டம் பெற்றனர்

யாழ்ப்பாணம், ஆக. 31 யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா சனியன்றுநடைபெற்றது கலை, விஞ்ஞானப் பீடங்களைச் சேர்ந்த 246 பேர் நேற்றுப் பட்டம் பெற்றனர்,

பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ரி. நடராஜா பட்டமளித்துக் கௌரவித்தார். [உ-7]

## பழைய நூல்கள் மட்டும்

குருநகர், ஆக. 31 வட்டுக்கோட்டை, அபிவிருத்தி சபை நூலகத்தில் பழைய நூல்கள் மாத்திரமே உள்ளன.

புதிய நூல்கள் ஒன்று கூட இல்லாததால் நூலகத்தைப் பயன்படுத்தும் மாணவர்கள் பெரிய ஏமாற்றத்திற்கு உள்ளாகி வருகிறார்கள். (ஓ-51)

## திருகோணமலையில் நகரசுத்தித் தொழிலாளர் உண்ணாவிரதம்

திருகோணமலை, ஆக. 31 திருகோணமலை ஆஸ்பத்திரிக்கு முன்னால் குடியிருக்கும் நகரசுத்தித் தொழிலாளர்கள் கடந்த வியாழன் திருகோணமலை நகரசபை வளவினுள் உண்ணாவிரதம் இருந்தனர்.

கடந்த புதன் ஜீப் ஒன்றில் வந்த கோஷ்டி ஒன்று நகரசுத்தித் தொழிலாளர்களைத் தாக்கியதுடன் சில வீடுகளுக்குத் தீயும் வைத்தனர். துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர்.

இச் சம்பவத்தை எதிர்த்தும் பாதுகாப்பு வழங்குமாறு கோரியுமே இந்த உண்ணாவிரதம் நடத்தப்பட்டது.

திருமலை நகர மண்டபத்தில் இயங்கும் இந்திய அமைதிகாக்கும் படையினரின் பொதுசனத் தொடர்பு நிலையத்தில் தொழிலாளர்கள் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

நகர சுத்தித் தொழிலாளர் பிரதேசத்தில் உள்ள மரம் ஒன்றில் புலிக்கொடி பறப்பதே இக்கோஷ்டியின் அட்டகாசத்துக்குக் காரணம் என்று தெரியவருகின்றது.

அன்று இரவு ஹஸ்கிஸன் வீதியில் உள்ள வீடு ஒன்றில் உயரத்தில் கட்டப்பட்டிருந்த புலிக் கொடியை ஜீப்பில் வந்த கோஷ்டி ஒன்று அகற்றிச் சென்றதும் குறிப்பிடத் தக்கது. (உ–எ–150)

## விமானப்படையின் அதிகாரிகள் குழு தென் இலங்கைவிரைவு

கொழும்பு, ஆக 31 இலங்கை விமானப் படையின் சிரேஷ்ட அதிகாரிகள் குழு ஒன்று தென் இலங்கைப்பகுதிக்கு அவசரமாக அனுப்பி வைக்கப்பட்டது–

சிவில் நிர்வாகத்தையும் பாதுகாப்பையும் சீர்படுத்தும் பணிகளில் இவர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

அம்பாந்தோட்டையில் தங்கியிருந்து இவற்றை இக்குழு கவனிக்கின்றது.

தென் இலங்கைக்குத் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆயுதப்படை வீரர்களின் எண்ணிக்கை 1971கிளர்ச்சியின் போது அனுப்பி வைக்கப்பட்ட எண்ணிக்கை அளவு இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

வெள்ளவாயா, அம்பாந்தோட்டை, மொனராகலை, உடவளவ பகுதிகளில் தான் கிளர்ச்சிக்காரர்கள் தீவிரமாகச் செயல்படுவதாக அறிவிக்கப்படுகின்றது. (இ-எ)

## யாழ்ப்பாணம் வரும் மந்திரி முகமதுவிடம் பிரச்சினைகள் கூறப்படும்

யாழ்ப்பாணம், ஆக. 31 யாழ்ப்பாணம் வர இருக்கும் போக்குவரத்து அமைச்சருக்கு போக்குவரத்துப் பிரச்சினைகளைத் தொகுத்துச் சமர்ப்பிக்க யாழ். அரச அதிபர் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

இதற்கு முன்னோடியாக யாழ். மாவட்ட போக்குவரத்துப் பிரச்சினைகளை அடையாளங் கண்டு அறிக்கை தயாரிக்கு முகமாக பிரயாணிகள் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடல் அடுத்த மாதம் 7ஆம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பங்குபற்ற விரும்பும் பிரயாணிகள் சங்கப் பிரதிநிதிகள் யாழ். செயலக தலைமைப்பீட உதவி அரச அதிபரை 7ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்திற் சந்திக்கும்படி கோரப்பட்டுள்ளனர். (உ–எ)

## ருக்மனின் கட்சியை அங்கீகரிக்கும்படி நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஆக. 31 ஐக்கிய இலங்கை மக்கள் கட்சியை அங்கீகரிக்கும்படி உயர் நீதிமன்றம் தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளது

திரு. ருக்மன் சேனநாயக்காவை அமைப்பாளராகக்கொண்டு அங்குரார்ப்பணம் செய்யப் பட்ட இக்கட்சியை தேர்தல் ஆணையாளர் அங்கீகரிக்க மறுத்துவிட்டார்.

அடிப்படை உரிமைச் சட்டத்தை மீறிய செயல் இது என்று கட்சி உயர் நீதிமன்றத்துக்கு முறையிட்டது.

இந்தமுறைப்பாட்டை விசாரணை செய்த பின்னரே உயர் நீதிமன்றம் முன்கண்ட உத்தரவைப் பிறப்பித்தது.

''இரண்டு பிரசைகளுக்கிடையில் பாரபட்சம் காட்டக்கூடியதாக அரசு அதிகாரி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடாது'' —இப்படி பிரதம நீதியரசர் சர்வானந்தா தனது தீர்ப்பில் தெரிவித்தார். (இ–எ)

## குருநகரில் இந்திய இராணுவ முகாமா? புனராலோசனை செய்யுங்கள்!

குருநகரில் அமைதிப் படை முகாம் ஒன்றை நிறுவும் எண்ணம் இருப்பின் அதைப் புனராலோசனை செய்யும்படி பலாலி முகாமில் உள்ள இந்திய அமைதிப்படைத் தளபதியை குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி கடிதமூலம் கோரியுள்ளது.

குருநகரின் வீதிகள் ... மக்கள் நெருக்கமாக வாழுகின்றனர். இராணுவ வாகனப் போக்குவரத்து மக்களுக்கு பெரும் இடைஞ்சலை ஏற்படுத்தும்.

எல்லாவற்றுக்கும் மேலாக அமைதிப்படையினர் இந்தியா திரும்பும் போது இலங்கை இராணுவம் முகாமிற்கு வந்துவிடும்.

இப்படி அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

### பண்பாட்டு..

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ந்தே உரிய நஷ்ட ஈடுகளை அரசிடம் வலியுறுத்திப் பெற்றுக்கொள்வதில் ஆணித்தரமாகவும், விடாப்பிடியாகவும் நடந்துகொள்ளவும் வேண்டும். செய்வார்களா?

### வர்த்தக—

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுகால ஆட்சியில் பிரதமர் லாங்கே தனது பொருளாதாரத் திட்டத்தை முழு அளவில் நிறைவேற்றுவார் என்று மக்கள் நம்புகின்றார்கள். [உ–எ]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

கறள் ஏறிய இரும்பைக் காந்தம் ஈர்க்காதது போலறு. அழுக்கு நிறைந்த மனதைத் தெய்வீக ஒளி கவர்ந்தெடுப்பதில்லை.
— சுவாமி சுங்காதரானந்தா

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:- 898/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்; தொலைபேசி 24805 88078
31.8.1987 த.பெ.இல: - 83

## ஊர்காவற் படை ஆயுதங்களை மீளப் பெறுதல்

ஊர்காவல் படையினரிடம் இருந்து ஆயுதங்களைத் திரும்பப் பெறும் கால எல்லையை மேலும் ஒரு மாதம் நீடிக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது அதாவது ஆயுதங்களைத் திரும்பப் பெறுவதில் அவசரம் காட்ட அரசு விரும்பவில்லை.

ஊர்காவற்படையினர் கிழக்கில் தமிழர்களின் பாதுகாப்புக்குக் குந்தகமாக இருந்தவர்கள். இராணுவத்துக்கும், அதிரடிப்படையினருக்கும் சளைக்காமல் தமிழர்கள் மீது அட்டூழியம் புரிந்தவர்கள்.

தமிழ்ப் போராளிகளிடம் ஆயுதங்களைத் திரும்பப் பெறும் போதே, ஊர்காவற்படையினரின் ஆயுதங்களையும் திரும்பப் பெற வேண்டும் என்பது ஜே. ஆர். – ராஜீவ் ஒப்பந்தத்தில் ஒரு விதி ஊர்காவற்படை கலைக்கப்படவேண்டும் என்பதும் ஒப்பந்தத்தின் ஒரு சரத்து

அதாவது ஒப்பந்தம் கைச்சாத்தான ஐந்து நாட்களில் ஊர்காவற்படை கலைக்கப்பட்டிருக்க வேண்டும்; ஆயுதங்களும் திரும்பப் பெறப் பட்டிருக்க வேண்டும்.

ஒப்பந்தம் கைச்சாத்தாகிச் சரியாக ஒரு மாதம் கடந்து விட்டது ஆனால் ஊர்காவற்படை கலைக்கப்படவில்லை. ஆயுதங்களும் முற்றாகத் திரும்பப் பெறப்படவில்லை,

ஒப்பந்தத்தை இலங்கை அரசு அப்பட்டமாக மீறும் செயல் இது. போராளிகள் முழு ஆயுதங்களையும் இன்னும் ஒப்படைக்காது இருப்பதற்கான எட்டிக்குப் போட்டியான நடவடிக்கையாகவும் இது அமைகிறது.

தமிழ்ப் போராளிகள் முழு ஆயுதங்களையும் தரவில்லை என்பதற்காக ஊர்காவற்படையினரைக் கொண்டு அட்டூழியங்களைத் தொடர்ந்து செய்விப்பதற்கான ஒரு திட்டமாகவும் இது இருக்கலாம்.

தமிழ்ப் போராளிகளிடம் இருந்து ஆயுதங்களைத் திரும்பப்பெறும் பொறுப்பு இந்திய அமைதிப் படையினுடையது. போராளிகள் முழு ஆயுதங்களையும் இன்னும் ஒப்படைக்கவில்லை என்பதற்காக, ஊர்காவற்படையைக் கலையாதிருப்பதும், அந்தப் படையினரிடம் இருந்து ஆயுதங்களைத் திரும்பப் பெறுவதைத் தாமதிப்பதும் இந்திய அமைதிப்படையில் இலங்கை அரசுக்கு நம்பிக்கை இல்லை என்பதையே தெளிவாக்குகின்றது.

ஊர்காவற்படை விடயத்தில் மட்டும் இலங்கை அரசு ஒப்பந்தத்தை மீறவில்லை. அரசியல் கைதிகளை விடுவித்தல், வடக்கு-கிழக்கில் அவசரகாலச் சட்டத்தை நீக்குதல் ஆகிய மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளையும் இலங்கை அரசு மீறிவிட்டது. ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒரு மாதம் கடந்தும் அவை செயலாக்கப்படவில்லை.

இவை, ஒப்பந்தத்தைக் காற்றில் பறக்கவிட்டு, அதனைச் செல்லாக் காசாக்கும் அரசின் சதிமுயற்சிகள் எனக் கொள்ளப்படின், அதில் தவறு என்ன?

தமிழ்ப் போராளிகளிடம் இருந்து முழு ஆயுதங்களையும் கைப்பற்றிவிட வேண்டும் என்பதிலேயே அரசு முற்று முழுதாகக் கவனம் வைத்திருக்கிறது. ஒப்பந்த அமுலில் அதற்கு அக்கறை இல்லை என்பதையும் அரசின் இந்தப் பழிக்குப் பழி வாங்கும் நடவடிக்கை எடுத்துக் காட்டுவதாகக் கொள்வதில் என்ன தவறு?

போராளிகளிடம் இருந்து முழு ஆயுதங்களையும் திரும்பப் பெறுவதற்கு ஒரு கால எல்லையை வகுப்பது கஷ்டம். அந்த விடயத்தில் விட்டுக் கொடுக்கும் தன்மை வேண்டும் என்று இந்தியத் தூதுவர் திரு. டிக்ஸிற்றே தெரிவித்து விட்டார். அதற்குப் பின்னரும், போராளிகள் ஆயுதங்களை ஒப்படைத்து முடியவில்லை என்பதற்காக இலங்கை அரசு ஒப்பந்தச்சரத்துகளை மீறிச் செயற்படுவதில் — வேண்டும் என்றே தாமதிப்பதில் — நிறையச் சூழ்ச்சி உண்டு.

கிழக்கில் அரச படைகளின் அடாவடித்தனங்களைத் தொடர அனுமதிப்பதும், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நடத்துவதும் ஒப்பந்த அமுலில் அரசு அக்கறை காட்டாததும் அதன் சூழ்ச்சித் திட்டங்களே. இவற்றைக் கண்டும் காணாதது போல இந்திய அரசு நடந்து கொள்கிறது. வடக்கு, கிழக்கில் அவசரகாலச் சட்டத்தை நீக்க வேண்டும் என்பதையும், பயங்கரவாதத் தடைச் சட்ட அமுலை ரத்துச் செய்ய வேண்டும் என்பதையும், தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுவிக்க வேண்டும் என்பதையும் இந்தியா, இலங்கையிடம் உரிய அழுத்தத்துடன் வற்புறுத்தியதாகக் காணோம்.

இந்தியா இவ் விடயங்களில் வெகு கண்டிப்புடன் நடந்தால் மட்டுமே தமிழ் மக்களின் நம்பிக்கையை அது பெற முடியும்.

இல்லையேல் இந்தியா, இரண்டு பக்கங்களிலும் நம்பிக்கைக்கு பாத்திரமாகாமல், ஒப்பந்த அமுலில் தோல்வியை ஈட்ட வேண்டி வரலாம்.

# இந்திரா ஆட்சியிலிருந்த நெருக்கடி நிலை மீண்டும் உருவாகி வருகின்றது

## ராஜீவ் எச்சரிக்கிறார்

புதுடில்லி, ஆக. 30

1975 இல் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி அவசரகால நிலைமையைப் பிரகடனம் செய்வதற்கு முன்னர் நாட்டில் இருந்த நிலைமைதான் இன்று மீண்டும் தோன்றியுள்ளது

பிரதமர் ராஜீவ் காந்தி முன்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸ் தொண்டர்கள் மத்தியில் பேசுகையில் பிரதமர் மேலும் சொன்னதாவது;

நாட்டைப் பலவீனப்படுத்தும் முயற்சியில் பல சக்திகள் ஈடுபட்டுள்ளன.

1975க்கு முன்னர் இயங்கிய சக்திகள் மீண்டும் தலை எடுக்கத் தொடங்கி உள்ளன.

1975 இல் அவசரகால நிலைமையைப் பிரகடனம் செய்தபோது இருந்த நிலைமையை மீண்டும் ஏற்படுத்துவதே இச்சக்திகளின் நோக்கம்.

இச்சக்திகளின் சுயரூபத்தைச் சரியான தருணத்தில் பகிரங்கப்படுத்த நான் தயாராக உள்ளேன்.

இப்படிப் பிரதமர் சாந்தி தெரிவித்தார்.

## இனவாத குழுக்களுக்கு தடை!

இஸ்லாமபாத் ஆக. 30

இனவாதக் குழுக்கள் பாகிஸ்தானில் இனி இயங்க முடியாது.

இதற்கான சட்டம் ஒன்றை பாகிஸ்தான் அரசு விரைவில் கொண்டு வரவுள்ளது.

அண்மைக் காலமாக கராச்சி, ஹைதராபாத் நகரங்களில் இடம்பெற்று வரும் இனக்கலவரங்களை அடக்கும் ஒரு நடவடிக்கையாகவே இச்சட்டம் கொண்டுவரப்படவுள்ளது

இக்கலவரங்களில் இதுவரை 20 க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். 200 பேர் வரையில் காயமடைந்தனர். 300 பேர் வரை கைதுசெய்து காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (இ-எ)

## முக்கிய இராணுவ தளமாக மாறிவரும் டியாகோ கார்ஸியா

டுபாய், ஆக. 30

வளைகுடா, வட அரேபியக்கடல் பிராந்தியம் ஆகியவற்றில் நிரந்தர கடற்படை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்துமகா சமுத்திரத்தில் உள்ள டியாகோ கார்ஸியா தளத்தை அமெரிக்கா பயன்படுத்துகின்றது.

36 சதுரமைல் விஸ்தீரணம் உள்ள டியாகோ கார்ஸியா தளம் ஆரம்பத்தில் தொடர்பு வசதிகளை மட்டுமே அமெரிக்க ஆயுத படைகளுக்கு வழங்கி வந்தது

இப்போது முக்கிய இராணுவத் தளமாக மாற்றப்பட்டுள்ளது. (இ-எ)

## விசேஷ நீதிமன்றம்

போதைவஸ்து கடத்தல் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி மோசடிகளை விசாரணை செய்ய விசேட நீதிமன்றம் ஒன்றை அமைக்க நேபாள அரசு முடிவு செய்துள்ளது. (இ-எ)

## எய்ட்ஸ் நோயால் வீடு ஒன்று எரிந்து சாம்பல்!

வாஷிங்டன், ஆகஸ்ட் 30

எய்ட்ஸ் நோய்க்கு ஆளாகலாம் என்று அஞ்சப்படும் மூன்று சிறுவர்கள் வசித்து வந்த வீடு மர்மமான முறையில் எரிந்து சாம்பலானது.

இச்சம்பவம் புளோரிடா மாநிலத்தில் இடம் பெற்றது

10, 9, 8 வயதான இம்மூன்று சிறுவர்களின் தந்தை எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார் என்று சந்தேகிக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து மூன்று சிறுவர்களையும் பாடசாலையில் அனுமதிக்க பாடசாலை நிர்வாகம் மறுத்து விட்டது.

இதனை எதிர்த்து சிறுவர்களின் தாய் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்தார்.

''எய்ட்ஸ் சிறுவர்களைப் பீடிக்கும் வாய்ப்பு இல்லை. ஆகவே பாடசாலையில் அவர்கள் கல்வி பயில அனுமதிக்கப்படவேண்டும்''— இப்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதை எதிர்த்துப் பாடசாலையில் படிக்கும் ஏனைய மாணவர்களின் பெற்றோர்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். இந்த நிலையில் அந்த மூன்று சிறுவர்களின் வீடு எரிந்து சாம்பலானது.

''நாம் ஊரை விட்டுப் போகின்றோம். எங்கு போகின்றோம் என்பது எமக்கே தெரியாது''— இப்படி சிறுவர்களின் தாய் பின்னர் தெரிவித்தார். (இ-எ)

## சோவியத் வேண்டுகோளை கம்யூ. கட்சி நிராகரித்தது

புதுடில்லி, ஆக. 30

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தலைமையிலான அரசுக்குப் பூரண ஆதரவு கொடுக்கும்படி சோவியத் பொதுசன தொடர்பு சாதனங்கள் விடுத்த வேண்டுகோளை இந்திய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிராகரித்து விட்டது.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் வி. பி. சிங்குடன் சேர்ந்து பொதுசன ஆர்ப்பாட்டம் ஒன்றை இந்திய அரசுக்கு எதிராக நடத்துவதில் கட்சி அக்கறை கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

'மக்கள் ஜனநாயகம்' என்ற கட்சிப் பத்திரிகையில் கட்சிப் பொதுச் செயலாளர் இ.எம்.எஸ். நம்பூதிரிபாத் இத்தகவல்களை வெளியிட்டிருக்கின்றார்.

''கட்சி ஆரம்பிக்கப்பட்டு 23 ஆண்டுகளாகின்றன. கட்சி சுதந்திரமாகவே இயங்கிவருகின்றது.

சர்வதேச விஷயங்களிலும் தேசியப் பிரச்சினைகளிலும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியுடன் பல தரம் கருத்து வேறுபாடுகளைக் கொண்டு இருந்தோம்.

இப்படி திரு. நம்பூதிரிபாத் தெரிவித்தார்,

### யார், யாருக்கு ஆயுள் குறைவு

மாஸ்கோ, ஆகஸ்ட் 30

பத்திரிகையாளர்களுக்கும் சமையல்காரர்களுக்கும் ஆயுள் குறைவு.

சோவியத் பத்திரிகை 'பிராவ்தா' இப்படி தெரிவித்துள்ளது

மதகுருமாரும், ஓவியர்களுமே நீண்ட ஆயுளைக் கொண்டவர்கள் என்றும் தெரிவித்துள்ளது. (இ-எ)

### இந்திய ஜனாதிபதி

## வெங்கட்டின் தெரிவை எதிர்த்து மனு

### தோற்றவர் தாக்கல்

புதுடில்லி, ஆக 30

இந்திய ஜனாதிபதியாக திரு. இ. வெங்கட்ராமன் தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியாகாது என்று தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு அடுத்த மாதம் 15 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. அண்மையில் உயர் நீதிமன்றத்தின் ஐந்து நீதியரசர்கள் முன்னிலையில் மனு விசாரணைக்கு வந்தது அப்போது இத்திகதி நிர்ணயிக்கப்பட்டது.

மனுவைத் தாக்கல் செய்தவர் ஜனாதிபதித் தேர்தலில தோல்வி அடைந்த சுயேச்சை வேட்பாளர் திரு. மிதிலேஷ்குமார்.

காங்கிரஸ் எம்பிக்கள், எம் எல். ஏக்கள் கட்டாயமாக திரு. வெங்கட்ராமனுக்கு வாக்களிக்க வேண்டும் என்று காங்கிரஸ் கொறடா தேவையற்ற செல்வாக்கைப்பயன்படுத்தியதால் இத் தெரிவு செல்லுபடியாகாது — இப்படி திரு. மிதிலேஷ்குமார் முறைப்பாட்டில் தெரிவித்திருக்கின்றார். (உ-எ)

### ரூ. 11 கோடிக்கு மேல் செலவு

புதுடில்லி, ஆக. 30

1983 இல் இருந்து 1987 ஜூலைவரை இலங்கைத் தமிழ் அகதிகளைப் பராமரிக்க இந்திய மத்திய அரசு 11 கோடி 59 லட்சம் இந்திய ரூபாவைச் செலவு செய்திருக்கின்றது

இந்திய இணை அமைச்சர் சிந்தாமணி பாணிக்ரஹி இவ்வாறு இந்திய ராஜ்ய சபையில் தெரிவித்தார், (உ-எ)

## காவேரி எண்ணெய்க் கிணறு

சென்னை, ஆக. 30

தமிழ் நாட்டில் காவேரி எண்ணெய்க்கிணறுகளில் இருந்து தினமும் 36 தொன் மசகு எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகின்றது.

பரீட்சார்த்த முறையில் உற்பத்தி தற்சமயம் இடம்பெறுகின்றது

நிலத்தில் 32 எண்ணெய்க் கிணறுகளும் கடலில் 20 கிணறுகளும் காவேரிப் படுகையில் தோண்டப் பட்டுள்ளன. (இ-எ)

**வெளி உலகில்**

# ஈராக்கின் தாக்குதலுக்கு விரைவில் பதிலடி

## ஈரான் அறிவிப்பு

தெஹ்ரான், ஆக 30

ஈராக்கின் தாக்குதலுக்குத் தகுந்த பதிலடி கொடுக்கப் போவதாக ஈரான் அறிவித்திருக்கின்றது.

அமெரிக்காவின் தூண்டுதலினால் தான் ஈராக் கடந்த சனி ஈரானின் எண்ணெய்க் குதங்களை விமானங்கள் மூலம் தாக்கியிருக்கின்றது.

எந்த சக்தியானாலும் அது அமெரிக்காவாக இருந்தாலும் சரி, ஈரானின் பதில் தாக்குதலைத் தடுத்து நிறுத்த முடியாது.

இப்படி ஈரானிய ஜனாதிபதி அலி கொமேனி நேற்று அறிவித்தார்.

ஈராக் விமானப்படையின் இரண்டு யுத்த விமானங்கள் ஈரானின் எண்ணெய்த் தாங்கிக் கப்பல், எண்ணெய்க் குதங்கள் ஆகியவற்றின் மீது குண்டுகளை வீசின.

இதனால் ஈரானின் எண்ணெய்க் குதங்கள் எரிந்துகொண்டிருந்தன என்று அறிவிக்கப்பட்டது. (இ-எ)

## கிளர்ச்சிக்காரருக்கு மன்னிப்பு இல்லை என்கிறார் பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி

அரசைக் கவிழ்க்க கிளர்ச்சி செய்த இராணுவத்தினரை மன்னிக்கும் பேச்சுக்கே இடமில்லை.

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி அக்கியூனோகொரஸோன் முன்கண்டவாறு அறிவித்து விட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மாளிகை மீது தாக்குதல் நடத்தி ஆட்சியைப் பிடிக்க இராணுவத்தினரில் ஒரு பிரிவு எடுத்த முயற்சி முறியடிக்கப் பட்டது தெரிந்ததே.

அதைத் தொடர்ந்து கிளர்ச்சிக்குத் தலைமை வகித்த இராணுவ அதிகாரி உட்பட 300 துருப்புக்கள் தப்பிச் சென்று விட்டனர்.

கைது செய்யப்பட்ட 600 துருப்புக்கள் மணிலாக்குடாவில் கப்பல் ஒன்றில் சிறை வைக்கப் பட்டுள்ளனர்.

கிளர்ச்சிக்காரர்களை மன்னிக்கும் எண்ணம் உண்டா? என்று கேட்ட போது ஜனாதிபதி கொரஸோன் சொன்னதாவது;

'இக்கிளர்ச்சி எனக்கு எதிரானது அல்ல, என் நாட்டுக்கு எதிரானது. ஆகவே கிளர்ச்சிக்காரர்களை மன்னிக்கும் பேச்சுக்கு இடமில்லை'.

### இந்திய -- இலங்கை

# கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுக் கூட்டம்

## புதுடில்லியில் 7ஆம் 8ஆம் திகதிகளில்

கொழும்பு, ஆக. 31

இந்திய இலங்கை கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுவின் கூட்டம் புதுடில்லியில் அடுத்த மாதம் 7ஆம், 8-ஆம் திகதிகளில்நடைபெறும்.

இலங்கை அரசு உயர் மட்டக்குழு ஒன்றை கூட்டத்தில் கலந்துகொள்ள அனுப்புகின்றது

நிதி அமைச்சர் ரொனி டி மெல் குழுவுக்குத் தலைமைவகிப்பார்.

இந்திய அரசுக் குழுவுக்கு நிதி அமைச்சர் நாராயண் தத் திவாரி தலைமை வகிப்பார்.

நிதி, வர்த்தகம், கூட்டு முதலீடு. கைத்தொழில், எண்ணெய்வள ஆராய்ச்சி ஆகிய துறைகள் இப்பேச்சுகளில் ஆராயப்படும். (இ-எ)

## ரயில் கட்டணத்தைக் குறைக்க கோரிக்கை

கொடிகாமம், ஆக. 31

காங்கேசன்துறைக்கும் வவுனியாவுக்கும் இடையில் பாதுகாப்புக்காக விதிக்கப்பட்ட 15சதவீத ரயில் கட்டண அதிகரிப்பை நீக்குமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்போது நிலைமை சீராகியுள்ளதால் ரயில் கட்டணங்களை மீளாய்வு செய்யுமாறு அவர்கள் கேட்கின்றனர். (ஒ-75)

## மஞ்சள் அங்கி அணிந்து குழப்பம்

கொழும்பு, ஆக. 31

மஞ்சள் அங்கிஅணிந்து குழப்பம் விளைவித்ததாகக் கூறப்படும் 2 பேரை கல்கிசைப் பொலீசார் கைது செய்தனர்.

ஒருவர் மாத்தறையில் உள்ள பிரிவின ஒன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டார். (இ-எ)

### பலாலி----

(2ஆம்பக்கத்தொடர்ச்சி)

வத் தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு இவர்களைச் சந்திக்க ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது.

1. ஞானப்பிரகாசம் இராசனுயகம், 2. பாலகிருஷ்ணன் வித்யாபதி, 3. கபாலதீன் நஷீர், 4. மாரிமுத்து ஜெயரூபன், 5. சிவஞானபண்டிதர் வேதானந்தராசா, 6. ஆறுமுகம்ராஜேந்திரன், 7. தம்பிராசா விஜயராசா, 8. தேவதாஸ் விஷ்ணுதாஸ். (நியம்)

### கருத்தடைக்குப் போய்

## வலது கையை இழந்த பெண்ணுக்கு ரூபா 20,000 நஷ்டஈடு

கொழும்பு, ஆக. 31

கருத்தடைச் சத்திர சிகிச்சை பெற ஆஸ்பத்திரிக்குச் சென்ற ஒரு பெண் வலது கையை முழங்கைக்குக் கீழே இழக்க வேண்டியதாயிற்று.

இதற்காக 20 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்க சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஒப்புக்கொண்டார்.

கையிழந்த பெண் அனுராதபுரம் மாவட்ட நீதிமன்றத்தில் தொடர்ந்தவழக்கில் இந்த இணக்கம் காணப்பட்டது

விபரம் வருமாறு;

ரி. எச். கமலாவதி ஐந்து பிள்ளைகளின் தாய். கருத்தடைச் சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்காக இவர் கெக்கிராவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். சத்திர சிகிச்சைக்கு முன்னர் மயக்கத்தை ஏற்படுத்த அவரின் வலது கையில் ஊசி மருந்து ஏற்றப்பட்டது

அப்படி இருந்தும் அவருக்கு மயக்கம் ஏற்படவில்லை. அதனை டாக்டருக்குக் கூறியும் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப் பட்டது

அதன்பின் ஊசி மருந்து ஏற்றப்பட்ட கை நீல நிறமாக மாறத் தொடங்கியது.

இது பற்றி டாக்டர்களிடம் எடுத்துச் சொல்லியும் கவனம் எடுக்கப்படவில்லை.

நிலைமை மோசமாகவே அவர் அனுராத

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...வருடம், பச்சைச்சந்தனம்,
...சந்தனம், No. 1 குங்குமப்பூ,
...ன்வேதமருந்துகள், மருந்துச்சரக்குகள்
வாசனைத் திரவியங்கள் போன்ற சகல
பொருள்களையும் உங்கள் திருப்திக்கேற்ற
வகையில் பெற்றுக்கொள்ளலாம்.

க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
(மருந்துச்சரக்கு வியாபாரம்)
இல. 5 (76), பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

31 - 08 - 1987 திங்கட்கிழமை

★ அபிஷேகப்பொருள்கள்
★ புதுமனை அத்திவாரப் பொருள்கள்
★ நாள்சரக்குகள்,
★ விவாகமுகூர்த்தப் பொருள்கள்
★ கோவில் சங்காபிஷேகப் பொருள்கள்
★ கும்பாபிஷேகப் பொருள்கள்
★ அஷ்டபந்தன மருந்து

க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
(மருந்துச்சரக்கு வியாபாரம்)
இ. 4, பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

பருத்தித்துறை - காங்கேசன் பஸ் சேவை:

# வடமராட்சியின் பல பகுதிகளில் பொலிஸ் நிலையங்கள் நிறுவப்படும்

## கூட்டுப்படைத் தளபதி தகவல்

வடமராட்சி, ஆக. 31

* பருத்தித்துறையில் இருந்து காங்கேசன்துறைக்கு இன்னும் சில தினங்களில் பஸ் சேவை ஆரம்பிக்கப்படும்.

காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை, புலோலி, பருத்தித்துறை போன்ற இடங்களில் பொலிஸ் நிலையங்கள் நிறுவப்படும்.

* பருத்தித்துறைமெதடிஸ்த மிஷன் மகளிர் கல்லூரி முற்றாக இயங்கலாம்.

இத்தகவல்களை முப்படைகளின் கூட்டுத் தளபதி லெப் கேர்ணல் சிறில் ரணதுங்கா தெரிவித்தார்.

வடமராட்சியில் சிவில் நிர்வாகத்தை சீர் செய்வது பற்றி புற்றளை மகா வித்தியாலயத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் கல்வி அதிகாரிகள், உதவி அரசாங்க அதிபர்கள், அரச உயர் அதிகாரிகள் மற்றும் பிரமுகர்கள். பொதுமக்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் கேர்ணல் சிறில் ரணதுங்க மேலும் கூறியதாவது:-

ஹாட்லிக் கல்லூரியில் தங்கியிருக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இன்னும் சில தினங்களில் அவ்விடத்தில் இருந்து அகன்று விடுவார்கள்.

அதன் பின்னர் மாணவர்களும் பொதுமக்களும் எவ்வித பயமுமின்றி நடமாடலாம்.

தொண்டமனாறு வெளிக்கள ஆய்வு நிலையத்திலுள்ள இராணுவத்தினரும் இன்னும் சில தினங்களில் வெளியேறி விடுவர்.

பருத்தித்துறை தலைமைத் தபாற் கந்தோர் மீண்டும் பழைய இடத்தில் இயங்குவதற்கான ஒழுங்குகளும் மேற் கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஓ-160)

## பாலகனை கிணற்றில் போட்டுவிட்டு தற்கொலை செய்ய முயன்றார் தாய்

கிளிநொச்சி, ஆக. 31

வறுமையின் கொடுமை தாங்காத இளம் கர்ப்பிணித் தாய் தனது வயதுப் பச்சிளம் பாலனைக் கிணற்றில் தூக்கி வீசித் தானும் தற்கொலை செய்ய முயன்ற சம்பவம் ஒன்று பரந்தன் சங்கிலிப் பாலத்தருகே நடைபெற்றது.

கடந்த செவ்வாய் மாலை இடம்பெற்ற இப் பரிதாபச் சம்பவத்தில் திருமதி ஆறுமுகம் அரியநாச்சி (20 வயது) தனது மகனான ஆறுமுகம் ஆனந்தராசா என்ற 2 வயது ஆண்மகனை கிணற்றில் தூக்கி வீசியதால் குழந்தை மரணமாகியது. தாய் கிணற்றில் குதித்த போது தெய்வாதீனமாக உயிர் தப்பினாராயினும் இவரது கால் சேதமுற்ற நிலையில் கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரது குழந்தையின் மரணவிசாரணையை கிளிநொச்சி பதில் நீதவான் திரு. சி. எஸ். சுந்தரலிங்கம் மேற்கொண்டார். மரண விசாரணையில் ஏற்பட்ட சாட்சியங்களை பொலிஸ் உத்தியோகத்தர் சு. விநாயகமூர்த்தி நெறிப்படுத்தினார்.

குழந்தையின் சடலப் பரிசோதனையை கிளிநொச்சி மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி திரு. சி. கதிரவேற்பிள்ளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தார்.

மரண விசாரணையில் திருமதி அரியநாச்சி கூறியதாவது:

சிரமதான வேலையில் கலந்து கொண்டு விட்டு பசியுடன் வீடு திரும்பினேன். வீட்டில் இறந்த குழந்தை ஆனந்தராஜன் மிகவும் பசியால் அழுது வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான். என்னிடம் பிள்ளைக்குக் கொடுக்க உணவு ஏதும் இருக்கவில்லை.

இதனால் மனவேதனை தாங்காது பிள்ளையையும் கிணற்றில் தூக்கிப் போட்டு நானும் தற்கொலைசெய்ய முற்பட்டு கிணற்றுள் பாய்ந்தேன்.

இதனைக் கண்ட அயலவர்கள் கிணற்றிலிருந்து தூக்கி எடுத்த போது பிள்ளை மரணமாகிவிட்டது.

எனது கால் முறிந்ததால் உடனடியாக இந்திய இராணுவத்தின் உதவியுடன் கிளிநொச்சி அரசினர் வைத்திய சாலைக்கு அயலவர்கள் கொண்டுவந்து சேர்த்தனர்.

இவ்வாறு திருமதி அரியநாச்சி தெரிவித்தார்.

விசாரணை முடிவில் பிள்ளையின் மரணம் கொலை எனவும், பிள்ளையின் கொலைக்குக் காரணமாக இருந்ததும், தான் தற்கொலை செய்ய முற்பட்டதற்காகவும் [illegible] உடல்நிலை சீரானதும்

### சேதமுற்ற . ..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஆலயங்களைப் புனரமைப்பதற்கான நிதி அரசாங்கத்திடமிருந்தும், யுனெஸ்கோ நிறுவனத்திடமிருந்தும் பெறப்படும் என்று அவர் விவரித்தார்.

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களை புனர் நிர்மாணம் செய்வதற்கு உலக வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடம் இருந்த நிதி உதவி பெறப்படும் எனவும்—

உலக வங்கி உதவியுடன் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கிராமிய ஒருங்கிணைப்புத் திட்டங்கள்மூலம் அபிவிருத்தி மேற்கொள்ளப்படும் எனவும் — அமைச்சர் இராசதுரை மேலும் தெரிவித்தார். (அ)

### முதற்கட்ட---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் பற்றிய பேச்சுக்களும் புதுடில்லியில் இரண்டாம் கட்டப்பேச்சுக்களுடன் சேர்த்து நடத்தப்படும் என்று தெரிய வருகின்றது. (அ-எ)

### காங்கேசன்-.

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

துறை சீமெந்து தொழிற்சாலை விடுதியில் இயங்க விருப்பதாக தெரிய வருகிறது.

காங்கேசன் துறைப் பொது மக்கள் தங்கள் முறைப்பாடுகளை இந்த பொலிஸ் நிலையத்தில் தெரிவிக்கலாம்.

இந்த நிலையத்தின் பொறுப்பதிகாரியாக சப் இன்ஸ்பெக்டர் சுந்தரநாதன் கடமையாற்றுவார். (இ-7)

### பலாலி - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிய மகஜரை ஊர்வலத்தினர் கையளித்தனர்.

மகஜரை ஏற்றுக் கொண்ட இராணுவ அதிகாரிகள் அண்மைக் காலச்சம்பவங்களை தாம் கவனித்து வருவதாகவும் பக்கச்சார்பின்றி ஒரு வாரகால இடைவேளியில் ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதியளித்ததை அடுத்து ஊர்வலத்தினர் கலைந்து சென்றனர்.

புத்தூர் நிலாவரையில் இருந்து புத்தூர்ச் சந்தி வழியாக அச்சுவேலி வந்து அச்சுவேலி வயாவிளான் வீதி வழியாக ஆர்ப்பாட்ட ஊர்வலம் பலாலி முகாமைச் சென்றடைந்தது. (இ-11)

### வலது----'-

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

புரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவரின் கை துண்டிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு கோரி கமலாவதி அனுராதபுரம் மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட வைத்திய அதிகாரி, சட்டமா அதிபர் ஆகியோருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார்.

அவ் வழக்கு விசாரணையின் போதுதான் மேற்கண்ட இணக்கம் காணப்பட்டது. (இ-எ)

நீதிமன்றத்தில் ஆஜர் ... பொலீஸார் ... உத்தரவிடப்பட்டது. (ஓ-76)

# பிரயாண ஒழுங்கு

## ★ குவைத் KUWAIT

"BES" குவைத் பிரயாணம் சம்பந்தமாய் பின்வருவோர் 02-09-87 புதன்கிழமை செல்ல இருப்பதால் தயவு செய்து உடனே வரவும்.

★ CARPENTERS
★ WELDERS
★ DRIVERS H. V. + H. E.
★ MECHANICS
★ LABOURER
★ SURVEYOR
★ DRAFTSMANS

HEAD OFFICE :

Construction & Development Company Ltd.

37, S. DE S. Jeyasinghe Mawatha,
NUGEGODA.

V. P. Balasubramaniam
C/o N V Ponnuthurai,
Kondavil West,
KONDAVIL.

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்

# மியண்டாட் தலைமையில் பாகிஸ்தான் அணி வெற்றி

## விரைவாக ஓட்டங்கள் குவிந்தன

சென்னை, ஆக 31

யாவித் மியண்டாட் தலைமையிலான பாகிஸ்தான் அணி நேற்று நடைபெற்ற பரபரப்பான மட்டுப் படுத்தப்பட்ட ஓவர் கிரிக் கெட் போட்டியில் வெற்றி பெற்றது.

இந்த அணி கவாஸ்கர் தலைமையிலான இந்திய அணியை 7 ஓட்டங்களால் தோற்கடித்தது.

சென்னை சேப்பாக்கம் விளையாட்டரங்கில், குழந்தைகள் நிதிக்காகவும்.

தத்தெடுத்து கிராமங்களின் நல்வாழ்வு நிதிக்காகவும் இந்த போட்டி நடத்தப்பட்டது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 40 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 260 ஓட்டங்களைப் பெற்றது.

சலீம் அலீக் 82 நிமிடங்களில் 92 ஓட்டங்களைப் பெற்றார். ராசிவ் அகமட் அடுத்தடுத்த 4 பந்துகளை 'சிக்சர்' களாக்கி ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்டார்.

ரவி சாஸ்திரி 34 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 40 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 253 ஓட்டங்களைப் பெற்றது.

அணித்தலைவர் சுனில் கவாஸ்கர் 5 'சிக்சர்'கள் 8 'பவுண்டரி' கள் அடங்கிய 85 ஓட்டங்களையும், முகமது அசருதீன் ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களையும், கபில்தேவ் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

அப்துல் காதிர் 46 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்

நேற்று நடைபெற்ற இந்த கிரிக்கெட் போட்டியில் இரு அணிகளும் இணைந்து 345 நிமிடங்களில் மொத்தமாக 513 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெற உள்ள வேளையில் பாகிஸ்தானின் இந்த வெற்றி அவர்களுக்கு ஓர் உந்துகோலாக அமையும் என கிரிக்கெட் அவதானிகள் கருதுகின்றனர். (இ-7)

## விளையாட்டரங்கு

ஷப்ரு, உதயன் - வங்கிகள் மோதல்

# தலா ஒவ்வொரு போட்டிகளில் வெற்றி

யாழ்ப்பாணம், ஆக. ...

'ஷப்ரு' - உதயன் கூட்டு அணிக்கும், கொமர்ஷல்-ஹற்றன் நாஷனல் வங்கிகளின் கூட்டு அணிக்கும் இடையே நேற்று நடைபெற்ற இரண்டு கிரிக்கெட் போட்டிகளில் இரண்டு கூட்டு அணிகளும் தலா ஒவ்வொருபோட்டிகளில் வெற்றியீட்டின.

மேற்படி மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் யாழ் சென். பத்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

மட்டுப்படுத்தப்பட்ட 25 ஓவர்களைக் கொண்ட முதலாவது போட்டியில் வங்கிகளின் கூட்டு அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்த அணி 10.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 7 ஓட்டங்களை மட்டும்பெற்றது

வை ஜெயந்தன் 3 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஈசன் ஓட்டம் எதையும் கொடுக்காமல் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய 'ஷப்ரு' உதயன் கூட்டு அணி 3.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 8 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

ராஜீவன் 6 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஆட்டம் மட்டுப்படுத்தப்பட்ட 15 ஓவர்களைக் கொண்ட போட்டியாக அமைந்தது

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய 'ஷப்ரு'- உதயன் அணி 13 3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றது.

விஜயகுமார் 10 ஓட்டங்களைப் பெற்றார்.

ரவிமோகன், உமாகாந்தன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய வங்கிகளின் கூட்டு அணி 11.1 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது.

தர்மன் 14 ஓட்டங்களைப் பெற்றார்.

ஈசன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (இ-7

பிதா சிங்கராயர் சொல்கிறார்:

# தமிழர்கள் தங்களைத் தாங்களே கொன்றது போதும், போதும்!

## ஈவிரக்கம் இல்லாத செயல்கள் போதும்

குருநகர், ஆக 31

தமிழர்கள் தங்களுக்குள் தாங்களே மோதுண்டு கொலையுண்டது போதும், போதும்! அது போன்ற ஈவிரக்கம் இல்லாத செயல்கள் இனி எமது சமூகத்தில் வேண்டவே வேண்டாம்.

இவ்வாறு வண. பிதா சிங்கராயர் தெரிவித்தார்.

குருநகர் ஆரோக்கிய நாதர் ஆலய வருடாந்த உற்சவ இறுதி நாள் வைபவத்தில் வண சிங்கராயர் மறை உரை நிகழ்த்தினார்.

அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

''ஏற்கனவே நம்முடைய மண் இரத்தத்தினால் தோய்த்தெடுக்கப்பட்ட மண்ணாக இருக்கிறது. பலவிதமான பகைமைகள் குரோதங்களினாலே ஒரு சிலர் அழிக்கப்பட்டிருக்கிறார்கள். அது பழைய கதை: பழைய கதையாகவே இருக்கட்டும்.

''இவ்வளவு காலமும் எமது நாட்டிலே ஓடிய இரத்த ஆறு போதும். எங்களுடைய சகோதரர்களை நாங்களேகொன்றது போதும். நமது கையிலுள்ள துப்பாக்கிகளினால் நமது சகோதரர்களை—நம்முடைய தமிழ்ச் சகோதரர்களை—கொன்றது போதும், அதுபோன்ற ஈவிரக்கம் இல்லாத செயல்கள் போதும், போதும்.''

அக்கதை தொடருமேயானால் இந்த உலகில் நாம் இனிமேல் மண்டை ஓடுகளையும் எலும்புக் கூடுகளையும் பற்றியே சிந்திக்கவேண்டி இருக்கும்.

''பழிவாங்கத் துடிப்பது இயற்கையான உணர்ச்சி. அந்த உணர்ச்சிகளை, வழிப்படுத்தத் தெரியவில்லை என்றால் மிருகத்துக்கும் எங்களுக்கும் என்ன வித்தியாசம்?

—இவ்வாறு அவர் கேட்டார். [அ-51]

### நண்பகலில் - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யிட்டிருக்கிறது.

நண்பகலில் அரைமணி நேரம் நித்திரை செய்வதால் இருதயநோய் ஏற்படுவதை முப்பது சதவீதம் குறைக்கமுடியும் என ஆராய்ச்சிகள் புலப்படுத்தி உள்ளனவாம். நண்பகலில் நித்திரை செய்யாத வடஅமெரிக்க இருதய நோயாளிகள், நண்பகலில் தூங்கும் வெப்பமண்டல இருதய நோயாளர்களைச் சோதித்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டபின்னரே இந்த முடிவுக்கு வரப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 31-08-1987ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Monday August 31 1987.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org